முகூர்த்த பட்டு புடைவைக்கு
சகல விதமான
காஞ்சிபுரம் சேலை
பட்டு வேட்டி கூறை சாறி
பனாரிஸ் சேலைகளுக்கும்
சிறந்த ஒரே இடம்
கோபிகா
ஆடை அகம்
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

ராகமாலிகா
என இயங்கி வந்த
எமது ஸ்தாபனம்
கோபிகா
ஆடை அகம்
என பெயர்
மாற்றப்பட்டுள்ளது
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 13 வெள்ளிக்கிழமை (27 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 61

# முழு அரசமைப்பையுமே சமஷ்டி முறைக்கு மாற்றுவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு!

## "வொய்ஸ் ஒவ் அமெரிக்காவுக்கு" கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பேட்டி

வாஷிங்டன், ஜனவரி 27

சமஷ்டி அரசமைப்பு முறையை ஏற்படுத்தக் கூடியதாக முழு அரசமைப்பையுமே மாற்றியமைப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்கு ஓர் உகந்த தீர்வை அரசாங்கத்தினால் முன்வைக்க முடியும்.

நல்ல தீர்வைக் காணவேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருந்தால் அத்தகைய சமஷ்டி தீர்வுக்கான அடிப்படையை அரசு முன்வைக்க வேண்டும்.

—இவ்வாறு "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார்.

திரு. பாலசிங்கம் வழங்கிய பேட்டியின்படி —

தற்போது யாழ். குடாநாட்டில் தாம் நடத்துகின்ற நீதிமன்றங்கள், பொலீஸ் போன்றவற்றை தொடர்ந்தும் — தீர்வு ஏற்பட்ட பின்னரும் — நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் விரும்புகின்றனர் போல் தெரிகின்றது.

சமஷ்டித் திட்டத்தின் கீழ் பண நோட்டு அடிப்பது, வெளிநாட்டுக் கொள்கை போன்றவற்றை அமுல் செய்தல் ஆகியவை மட்டுமே மத்திய அரசிடம் இருக்கும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பயமுறுத்தி "புளொட்"டில் என்னைச் சேர்த்தனர்

### தப்பி வந்தவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 27

"இராணுவத்தால் கைது செய்யப்பட்ட என்னை பலாத்காரமாக, பயமுறுத்தி தமது அமைப்பில் சேர்த்த "புளொட்" குழுவினர் எம்மை தாக்கி, அடித்து சித்திரவதை செய்தார்கள்"

புளொட் அமைப்பில் இருந்து விடுதலைப் புலிகளிடம் சரண் அடைந்த ரவீந்திரராஜா இரத்தினசிங்கம் என்ற இளைஞன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளிடம் சரண் அடைந்த அவர் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;-

கடந்த வருடம் 'புளொட்' அமைப்பினர் பலாத்காரமாக என்னை தமது இயக்கத்தில் இணைத்தனர். நான் நெல் வெட்டிக் கொண்டிருந்த சமயம், அவர்கள் அங்கு வந்து " உனது குடும்பத்துக்கு காசு கொடுப்போம். எம் இயக்கத்தில் சேர்" என்று பயமுறுத்தி சேர்த்தனர்.

வறுமையில் வாடிய நான் எனது குடும்பத்துக்காக அதில் இணைந்தேன். ஆனால் அவர்கள் பின் எனது குடும்பத்துக்கு பணம் ஏதும் கொடுக்கவில்லை.

எமக்கு பெரிதாக ஆயுத பயிற்சி அளிக்கவில்லை. எம்மை எடுபிடி வேலைக்குத் தான் வைத்திருந்தார்கள்.

இராணுவத்துடன் சேர்ந்து புளொட் குழுவினர் வவுனியா நகரில் 10 பேரை பிடித்து வந்து லக்கி சித்திரவதை முகாமில் வைத்து பணம் கேட்டு அவர்களை சித்திரவதை செய்வதை நான் கண்டேன்,

வவுனியாவில் ஆசி குளம்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற பாதுகாப்பு: 200 பேர் விசேட பயிற்சி

கொழும்பு, ஜன. 27

நாடாளுமன்றில் தற்பொழுது நிலவும் பாதுகாப்பு ஒழுங்குகளுக்கு முற்றிலும் மாறுபட்ட தீவிர பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ளும் நோக்குடன் அதிரடிப் படையினரால் பயிற்றப்பட்ட 200 பாதுகாப்பு அதிகாரிகளை ஈடுபடுத்த பாதுகாப்புத்துறை தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றத்துக்கும், நாடாளுமன்றம் நடைபெறும் நாட்களிலும் முழுப்பாதுகாப்பையும் இந்த பாதுகாப்பு பிரிவே வழங்கும்.

இந்தப் புதிய படைப்பிரிவைச் சேர்ந்தோருக்கு விசேட பயிற்சிகள் வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (ஒ-க-6-3)

## அடுத்த கட்டப் பேச்சுக்கு இன்னும் திகதி முடிவில்லை

கொழும்பு, ஜன. 27

விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் இடையேயான அடுத்த கட்டப் பேச்சுக்கள் நடக்கும் திகதி குறித்து இன்னும் முடிவுசெய்யப்படவில்லை என்று அரசஅதிகாரியை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த வாரம் இந்தப்பேச்சுக்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்று அரச அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் அடுத்த கட்டப் பேச்சில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து இணக்க நிலை ஏற்படாமையே பேச்சுக்கான திகதி நிர்ணயிக்கப்படாமைக்கு காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## பெலவத்தை சீனி ஆலை ஊழியர் வேலை நிறுத்தம்

கொழும்பு, ஜன. 27

பன்னாட்டு நிறுவனமான பெலவத்தை சீனித்தொழிற்சாலையில் கடந்த 10 ஆண்டு காலமாகப் பணிபுரிந்த சுமார் 4 ஆயிரத்து 500 தொழிலாளர்கள் நேற்று முதல் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

இவர்கள் ஜனாதிபதிக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகளிடம் சரண் அடைந்த புளொட் உறுப்பினர்கள் இருவரை மேலேயுள்ள படத்திலும், அவர்கள் ஒப்படைத்த ஆயுதங்களை கீழேயுள்ள படத்திலும் காணலாம். (ஏ)

## தமிழ் குழுக்களின் உறுப்பினருக்கு சரணடைய பகிரங்க வேண்டுகோள்

### புலிகள் விடுத்தனர்

யாழ்ப்பாணம், ஜன 27

"தமிழ்மக்களின் விடிவுக்காகப் போராடும் நாம் எம்முடன் இணைந்து செயற்பட எம்மிடம் சரண் அடையுமாறு ஏனைய தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்களுக்கு பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கிறோம்"

விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. பொற்கோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இப்படித் தெரிவித்தார்.

கடந்த 8 ஆம் திகதி விடுதலைப் புலிகளிடம் வவுனியா பிரதேசத்தில் வைத்து சரண் அடைந்த "புளொட்" அமைப்பைச் சேர்ந்த இரு உறுப்பினர்களும் பங்குபற்றிய செய்தியாளர் மாநாட்டில் வைத்து அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார் அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;-

ஏனைய குழுக்களின் உறுப்பினர்களை எம்மிடம் சரணடையுமாறு ஏற்கனவே பல முறை அழைப்பு விடுத்து வந்துள்ளோம்.

இன்றுள்ள நிலையில் இந்த அழைப்பு மற்றவர்களுக்கும் போய்ச் சேரவேண்டும் என்ற நோக்கத்துடன் அதனைப் பகிரங்கமாக விடுக்கிறோம்.

தமிழ்மக்களின் விடிவுக்காகப் போராடும் நாம் எம்முடன் சேரவிரும்புபவர்களை சேருமாறு கேட்கிறோம்.

எம்மிடம் சரண் அடைந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எடுபிடி வேலை செய்வித்து சித்திரவதைப் படுத்தினர்!

### புளொட்டிலிருந்து தப்பியவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன 27

"இராணுவத்தால் கைது செய்யப்பட்டு கொழும்பில் தடுத்து வைக்கப்பட்ட என்னை "புளொட்" குழுவினர் பிணைஎடுத்து வேலை தருவதாகக் கூறி தம்முடன் கூட்டிச் சென்றனர். அங்கு எனக்கு எடுபிடி வேலை தந்து சித்திரவதை செய்தனர்."

விடுதலைப் புலிகளிடம் சரண் அடைந்த மட்டக்களப்பைச் சேர்ந்த திலகர் ரஞ்சன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது;

மட்டக்களப்பில் நடந்த சுற்றிவளைப்பின் போது இராணுவத்தினர் என்னைக் கைது செய்து கொழும்புக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு வந்த "புளொட்" குழுவினர் என்னை இராணுவத்திடம் இருந்து பிணை எடுத்து பலாத்காரமாக தமது இயக்கத்துக்குச் சேர்த்தனர்.

என்னை வவுனியாவுக்குக் கூட்டிவந்து சித்திரவதை செய்து பங்கர்களில் தடுத்து வைத்தனர் "பங்கர்" வெட்டவும், மலசலகூடம் கழுவவும் என்னைப் பாவித்தனர்.

எனக்குச் சம்பளம் தருவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அ'புரவில் தங்கியிருக்கும் கண்காணிப்பு குழுவினர்

கொழும்பு ஜன 27

வவுனியா, முல்லைத்தீவு பகுதிகளில் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை கண்காணிப்பதற்கு நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவினர் இப்பொழுது அநுராதபுரத்தில் தங்கியுள்ளனர்

இந்தக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் புலிகள் தரப்பு பிரதிநிதிகள் இன்னமும் இவர்களை சந்தித்துப் பேசவில்லை. விரைவில் இந்த சந்திப்பு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா சென்ற கண்காணிப்புக் குழுவினர் பூவரசங்குளம் தாண்டிக்குளம், நொச்சிமோட்டை பகுதிகளுக்குச் சென்று அப்பகுதிகளைப் பார்வையிட்டுள்ளனர். வவுனியா இராணுவ அதிகாரிகளையும் சந்தித்துப் பேசியுள்ளனர்.

## தமிழ் அகதிகளில் பலர் நோர்வேயில் தலைமறைவு

ஒஸ்லோ, ஜன. 27

நோர்வேயைத் தொடர்ந்து பிற நாடுகளும் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்ப முயற்சிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது

நோர்வே திருப்பி அனுப்ப எண்ணியுள்ள சுமார் 300 அகதிகளில் சிலர் தலைமறைவாகி உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-க-6)

## இரு புளொட் உறுப்பினர் புலிகளிடம் சரணாகதி

யாழ்ப்பாணம், ஜன. 27

"புளொட்" அமைப்பைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் கடந்த 8ஆம் திகதி வவுனியாவில் வைத்து விடுதலைப் புலிகளிடம் சரண் அடைந்தனர்.

வவுனியா சமயபுரம் "புளொட்" அமைப்பின் முகாமில் இருந்து ஆயுதங்களுடன் தப்பி வந்த இந்த இரு உறுப்பினர்களும் வவுனியா இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்தைத் தாண்டி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்து விடுதலைப் புலிகளிடம் சரண் அடைந்தனர்.

திருகோணமலை கிளிவெட்டியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் ரவீந்திரராஜா (18 வயது-அவரது இயக்கப் பெயர் சந்திரன்), மட்டக்களப்பு மண்டூர் பகுதியைச் சேர்ந்த திலகர் ரஞ்சன் (22 வயது - இயக்கப் பெயர் நந்தீஸ்) ஆகியோரே சரண் அடைந்தவர்களாவர்.

இவ்விருவரும் இரண்டு ரி81-1 ரகத் துப்பாக்கிகள், 10 ரவைக் கூடுகள், 290 ரவைகள், இரண்டு ஹோல்சர்கள் ஆகியவற்றுடன் விடுதலைப் புலிகளிடம் சரண் அடைந்தனர்.

இந்த ஆயுதங்கள் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் காண்பிக்கப்பட்டன.

இருவரும் செய்தியாளர்களுக்கு தனித்தனி பேட்டியும் அளித்தனர். (இ-5)

## அரிசித் தட்டுப்பாடு சில தினங்களில் நீங்கும் வன்னியிலிருந்து நெல் கிரமமாக இங்கு வரும்

யாழ்ப்பாணம், ஜன. 27

அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு தற்காலிகமானது. சில தினங்களில் அது நீங்கிவிடும்.

அரிசித் தட்டுப்பாடு குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு விசாரணை செய்த போது இத்தகவல் தெரியவந்தது.

அரிசித் தட்டுப்பாடு குறித்து செய்தியாளர்கள் நடத்திய விசாரணைகளின் போது மேலும் தெரியவந்ததாவது:-

சில சமயங்களில் அரிசி விலை கிலோ அறுபதுரூபாவுக்கும் அதிகமாகச் செல்வது அவதானிக்கப்பட்டதை அடுத்து கடந்த ஆண்டு முற்பகுதியில் அரிசி விற்பனை தொடர்பான நடவடிக்கைகள் ஒரு கட்டுப்பாட்டு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன.

இதன்படி —

விவசாயிகளுக்கும், பாவனையாளர்களுக்கும் நஷ்டம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவின் அமைதி முயற்சியால் தென்னாசியா முழுவதும்பயன்பெறும்

## இந்திய சஞ்சிகையில் ஆசிரிய தலையங்கம்

புதுடில்லி, ஜன. 27

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எடுத்து வரும் முயற்சிகளில் அவர் வெற்றி பெறுவரானால் அதனால் இலங்கை மட்டுமல்ல தெற்காசியப் பிராந்தியம் முழுவதுமே பயனடையும்.

இந்தியாவில் வெளியாகும் ''மெயின் ட்ரீம்'' என்ற பிரபல ஆங்கில சஞ்சிகையில் கடந்த 14 ஆம் திகதி வெளியான ஆசிரிய தலையங்கத்தில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'கடந்த காலத்தில் இலங்கை அரசாங்கங்கள் செய்த தவறுகளை சீர்செய்ய ஜனாதிபதி சந்திரிகா முயற்சிக்கின்றார். தமிழ்த் தீவிரவாதத்தை இரவோடிரவாக களைந்தெறிந்துவிட முடியாது பலவிதமான நிச்சயமற்ற தன்மைகள் இருக்கின்ற போதிலும் நிதானத்தை இழக்காமல், விட்டுக் கொடுக்கும் உணர்வுடனான அணுகு முறையைக் கடைப்பிடிக்க வேண்டியதும் மக்களில் நம்பிக்கை வைத்து ஒரு ஆரம்பத்தை முன்னெடுக்க வேண்டியதும் அவசியமாகும். இதைத்தான் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா செய்திருக்கிறார். அவர் தமது முயற்சியில் வெற்றி காண்பாரேயானால் அதனால் இலங்கை மாத்திரமல்ல, தெற்காசியப் பிராந்தியம் முழுவதுமே பயனடையக் கூடியதாக இருக்கும். இதைக் கருத்தில் கொண்டு தான் சந்திரிகாவின் பாராட்டத்தகு முயற்சியை நாம் வரவேற்க வேண்டும் இதுவரையான பேச்சுவார்த்தைகள் மூலமாக உண்மையில் சாதிக்கப்பட்டிருப்பது இனிவரும் நாள்களில் காணப்படவேண்டியிருக்கும் கணிசமான முன்னேற்றத்துக்கு அவசியமான மோதல் தவிர்ப்பு இணக்கப்பாடாகும். நியாய சிந்தையுடைய சகல எமது நாட்டுப் பிரஜைகளும் (இந்தியர்கள்) முழு தெற்காசிய பிராந்திய மக்களும இலங்கையில் அமைதியையும் சமாதானம், சௌஜன்யத்தையும் காணும் நோக்கில் ஜனாதிபதி சந்திரிகா மேற்கொண்டுள்ள முயற்சிகளை பாராட்ட வேண்டும். விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் ஜனாதிபதி சந்திரிகா கண்டுள்ள மோதல் தவிர்ப்பு இணக்கப்பாட்டையும் அதன் முக்கியத்துவத்தையும் சிறுமைப்படுத்தும் போக்கொன்றை புதுடில்லியில் குறிப்பிட்ட சில வட்டாரங்களில் காண முடிகிறது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கப்படைகளுக்கும் இடையே மோதல்கள் மீண்டும் மூண்டு மோதல் தவிர்ப்பு, இணக்கப்பாடு சீர்குலைக்கப்படும் என்ற முறையற்ற சாத்தியப்பாட்டை உரக்கத் தெரிவிப்பதை விடுத்து மோதல் தவிர்ப்பை சந்தேகம் எதற்குமே இடமில்லாத வகையில் வரவேற்று ஆதரிக்க வேண்டிய தேவை இருக்கிறது என்றும் 'மெயின்ஸ் ட்ரீம்' அதன் ஆசிரிய தலையங்கத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறது. (ஐ)

## தஸ்தாவேஜுக்கள் இல்லாதோர்
# அடையாள அட்டை பெற மேன்முறையீடு செய்யலாம்

கொழும்பு, ஜன 27

கிராம சேவையாளர் மூலம் தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளாதோர், தேசிய அடையாள அட்டைத் திணைக்களத்திற்கு மேன்முறையீடு செய்ய முடியும் என்று தேசிய அடையாள அட்டை விநியோகத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் குணசேன இமதுவ தெரிவித்தார்.

பிறப்புச் சான்றிதழ் மற்றும் இதர தஸ்தாவேஜுக்களை சமர்ப்பிக்கத் தவறுவோர் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க கிராம சேவையாளர்கள் அனுமதிப்பதில்லை.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தமது தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ஒ 4)

## கற்கை நெறி

வலிகாமம் தெற்கு, ஜன. 27

தொலைக்கல்வி நிலைய பயிலுநர் ஆசிரியர்களுக்கான விசேட கற்கை நெறி செயலமர்வுகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை சனிக்கிழமையும் மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற உள்ளன.

## ஆலயங்களில்

தென்மராட்சி, ஜன. 27

சாவகச்சேரி கல்வயல் ஹரிஹரபுத்திர ஐயனார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

உற்சவ இறுதி நாளான எதிர்வரும் திங்கட்கிழமை 108 சங்காபிஷேகமும் மணவாளக் கோல உற்சவமும் நடைபெறும். (ஐ-117)

## இசை அரங்கு

தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலைகளின் இசை ஆசிரியர் சங்கத்தின் மாதாந்த இசை அரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் சங்கத் தலைவர் பொன். வாமதேவன் தலைமையில் நடைபெறும்.

இசை அரங்கில் சங்கீத பூசணம் எல் திலகநாயகம் போலின் இசைக் கச்சேரி நடைபெறும். (ஒ-117)

# தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை தேர்வுகளின் பரிசளிப்பு விவரங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 27

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப்பேரவை நடத்திய தமிழீழ முதனிலைத் தேர்வு, இளநிலைத் தேர்வு, பொதுக் கல்வித் தேர்வு ஆகியவற்றில் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேற்படி பேரவை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

★ தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களையும், கல்விக்கோட்ட மட்டங்களில் முதல் இரு இடங்களையும் பெறும் 70 மாணவர்கள் தமிழீழத் தேசியத் தலைவரின் பாராட்டிதழ்களையும், 5 ஆயிரம் ரூபா காசுப் பரிசுகளையும் பெறுகின்றனர்.

★ தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை தான் நடத்திய தமிழீழ முதனிலைத் தேர்வு, தமிழீழ இளநிலைத் தேர்வு, ஆகிய இரு தேர்வுகளிலும் தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களையும், கல்விக் கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவர்களுக்கு 500 ரூபாவுக்கான காசு முறியினையும், சிறப்புத் தகைமை சான்றிதழ்களையும் வழங்குகின்றது.

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களையும், கோட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களையும் பெறும் மாணவர்களுக்கு 500 ரூபாவுக்கான காசு முறியினையும், சிறப்புத்தகைமைச்சான்றிதழ்களையும் பேரவை வழங்குகின்றது.

★ தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட தமிழீழ முதனிலைத் தேர்வு, தமிழீழ இளநிலைத் தேர்வு, தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வு ஆகிய மூன்று தேர்வுகளிலும் தேசிய மட்டத்தில் மிகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெற்று முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் மாணாக்கர்களுக்குத் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை, பேரவை அடையாளங் கொண்ட தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வழங்குகின்றது.

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் பரிசு பெறும் மாணவர்களுக்கு பேரவை வெற்றிப் பதக்கங்களையும் வழங்குகின்றது

★ தமிழீழ முதனிலை, இளநிலை, பொதுக் கல்வித் தேர்வுகளில் பொதுப் பாடங்களில் தேசிய மட்டத்தில் கூடுதலான புள்ளிகளைப் பெறும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் சிறப்பு தகைமைச் சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன.

★ தமிழீழ முதனிலை, இளநிலை, பொதுக்கல்வித் தேர்வுகளில் தமிழ்ப்பாடத்தில் தேசிய மட்டத்தில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கும விடுதலைப் புலிகளின் தமிழ் வளர்ச்சிக் கழகம் காசுப் பரிசுகளையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்குகின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டக் கல்விக் கோட்டங்களுக்கான தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வுப் பரிசளிப்பு விழாக்கள் அந்த அந்த மாவட்டங்களில் பெப்ரவரி மாதத்தில் நடைபெறவிருக்கின்றன (ஒ-க)

# சமாதான முயற்சிக்கு எனது ஆதரவு உண்டு

## காலிதாஸியா கூறுகிறார்

கொழும்பு, ஜன. 27

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசு மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளுக்கு தமது முழு ஆதரவும் உண்டு என்று பங்களாதேஷ் பிரதமர் பேகம்காலிதாஸியா தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா அளித்த வரவேற்பில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

சார்க் அமைப்புக்களின் தலைவிஎன்றமுறையில் தமது முழு ஆதரவுஇந்த முயற்சிக்கு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இருதரப்பு விடயங்கள் குறித்தும் இருவரும் கலந்துரையாடினார்கள்.

பிரதமர் பேகம் காலிதாஸியா தமது 2நாள் இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று நாடு திரும்பினார். (ஒ-3)

# தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 27

தமிழீழ முதனிலைத்தேர்வு, இளநிலைத் தேர்வு, பொதுக் கல்வித் தேர்வு ஆகியவற்றில் தேசிய, கோட்ட மட்டங்களில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பரிசளிப்பு விழாவுக்கு பேரவையின் தலைவர் வண. பிரான்சிஸ் யோசேப் அடிகள் தலைமை வகிப்பார்.

விழாவில் சிறப்புரைகளை அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு சு. ப. தமிழ்ச்செல்வன், யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம்போல், யாழ். வலயம் - 1 கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி, வலயம் - 2 கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி, யாழ். பரியோவான் கல்லூரி முகாமையாளர் கலாநிதி து. வி. ஜெபகுலராஜா, யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்துவார்கள் (க-4)

## சிறுவர் விளையாட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ். மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களிலுள்ள சிறுவர்களிடையே விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்துவதற்கு றெட்பானா நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

'றெட்பானா' நிறுவனத்தின் பராமரிப்பிலுள்ள 23 முகாம்களில் உள்ள சிறார்களிடையே நாளை 28 ஆம் திகதி இவ் விளையாட்டுப் போட்டி நடத்தப்படவுள்ளது. (ஐ-4)


உ

யா/ வண். வடகிழக்கு

## கொண்டலடி விநாயகர் ஆலயம்

18-01-1995 மாலை 6 மணிக்கு நடைபெற விருந்த கலைநிகழ்ச்சிகள் இன்று (27-01-1995) வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளன.

விசேட நிகழ்ச்சிகள்

மாலை 4-00 மணி:
விசேட அபிசேகம், பூசை

மாலை 6-00 மணி;
''மங்களஇசை''
கா. குகானந்தன் குழுவினர்
(ஆலய மங்களவாத்திய குழு)

இரவு 8-00 மணி:
விசேட நாதஸ்வரக் கச்சேரி

N.K. பத்மநாதன் | P. முருகதாஸ்
S. சிதம்பரநாதன் | R. முருகானந்தம்
V.K. கானமூர்த்தி | K. கணேசன்
V.K. பஞ்சமூர்த்தி | S. சுப்பிரமணியம்

இரவு 11-30 மணி;
''இன்னிசைக் கச்சேரி''
திரு. வர்ண ராமேஸ்வரன் குழுவினர்

அதிகாலை 1-30 மணி:
''பக்தி கானங்கள்''
யாழ். ராஜன்ஸ் குழுவினர்

நன்றி
ஆலய நிர்வாக சபையினர்

544, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (34877)


# ஹேமா-சஜித் தேசியபட்டியல் எம். பி. ஆவதற்கு வாய்ப்பு இல்லை

## பெப். 8க்கு முன் நியமனம்

கொழும்பு, ஜன. 27

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் எம். பி. பதவிக்கு உள்ள இரு வெற்றிடங்களும் பெப்ரவரி 8 ஆம் திகதிக்கு முன்னர் நிரப்பப்பட்டுவிடும் என்று ஐக்கிய தேசியக்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான முடிவு ஐ. தே. க. நிர்வாக சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருப்பதாகவும் —

புதிதாக நியமனமாகும் இரு எம். பிக்களின் பெயர்கள் விரைவில் அறிவிக்கப்படும்] என்றும் — அவர் தெரிவித்தார்.

புதிய எம் பிக்களாக எவரை நியமிப்பது என்று இதுவரை முடிவு செய்யப்படவில்லை என்று ஐ தே க பொதுச் செயலாளர் காமினி அத்துக் கோறள தெரிவித்தார்.

பல பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகவும், இரண்டு வாரங்களுக்குள் இறுதி முடிவு எடுக்கப்பட்டு புதிய எம். பிக்களின் பெயர்கள் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் ஐ. தே. கவின் தேசிய பட்டியல் எம். பிக்கள் ஆகும் வாய்ப்பு ஹேமா பிரேமதாஸாவுக்கும் மகன் சஜித்துக்கு குறைந்து வருவதாகவும் —

காலஞ்சென்ற ஒஸி அபயகுணசேகராவின் இடத்துக்கு ஸ்ரீலங்கா மக்கள் கட்சியைச் சேர்ந்த சரத் கொங்கஹகே நியமிக்கப்படலாம் என்றும் —

மற்றைய இடத்துக்கு தமிழர் ஒருவர் நியமிக்கப்படலாம் என்றும் அரசியல் வட்டாரங்களை ஆதாரம் காட்டி 'ஐலண்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

## எழுது வினைஞர்: விண்ணப்ப திகதி நீடிப்பு

கொழும்பு, ஜன. 27

எழுதுவினைஞர் மற்றும் அத்தோடு இணைந்த சேவையாளர் பதவிகளுக்கு நடத்தப்படவிருக்கும் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் திகதி இம்மாதம் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

## இலக்கிய அவை

யாழ். திருமறைக்கலாமன்ற பிரதான வீதி கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு இலக்கிய அவை நடைபெறும்.

மன்ற இயக்குநர் பேராசிரியர் என் மரியசேவியர் அடிகள் ''உலக இலக்கியம்ஓர் அறிமுகப்பார்வை'' என்னும் தலைப்பில் இலக்கிய உரை நிகழ்த்துவார். (ஒ-51)


## தொழி நுட்பக் கல்லூரி இறுதிப்பரீட்சை - 1994

1994ஆம் கல்வியாண்டிற்கான தமிழ் / ஆங்கிலம் கருக்கெழுத்தாளர் தராதரப்பத்திரப்பரீட்சை 1995-01-30 ஆம் திகதி மு. ப. 9-00மணிக்கு ஆரம்பமாகும் எனப்பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். அன்றைய தினம் காலை 8 00 மணிக்கு சம்பந்தப்பட்ட பகுதித் தலைவரிடம் தமது மாணவ பிரவேச அனுமதிச்சீட்டைச் சமர்ப்பித்து தமது பரீட்சை அனுமதிச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு அறியத்தருகிறேன்.

க. ஜெயரத்தினம்,
அதிபர்.

தொழிநுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்,
1995 — 01 — 26

(சி/443)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக பயிற்சி ஆசிரியை
செல்வி. ந சாரதாமணி
அவர்களின் அருமைத் தந்தையார்
க. தம்பிராஜா
அவர்கள்

11-01-95 இல் இறைவனடி சேர்ந்ததை தயிட்டு அதிர்ச்சியடைந்தோம் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

வேலணை தொலைக் கல்வி
நிலையத்தினர்.

[34876]


# றுவாண்டாவுக்குள் திரும்பிச் செல்லமறுக்கும் பெரும்பான்மை 'ஹூத்து' இனமக்கள்!

## உள்நாட்டு யுத்தம் முடிந்தும் அகதிப்பிரச்சினை தீரவில்லை

ஆபிரிக்காவில் உள்ள சின்னஞ்சிறு நாடான றுவாண்டாவில உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து பல மாதங்கள் கழிந்து விட்டன.

ஆனால் யுத்தத்துக்கு அஞ்சி அண்டை நாடான ஸயரில் தஞ்சம் புகுந்த லட்சக் கணக்கான றுவாண்டா அகதிகள் இன்னும் தமது சொந்த நாடு திரும்ப மறுத்து வருகின்றனர்.

றுவாண்டா எல்லையில் ஸயர் நாட்டுக்குள் ''கோமா'' என்ற இடத்திலேயே பல முகாம்களில் இந்த அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் எண்ணிக்கை 12 லட்சம் என்கிறது யு. என். சி. ஆர். எனப்படும அகதிகளுக்கான ஐ. நா. தூதராலயம்.

இந்த அகதிகளைறுவாண்டாவுக்குள் திரும்பவும் அனுப்பி வைப்பதற்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகமும், மற்றும் தொண்டர் நிறுவனங்களும் படாதபாடுபட்டு வருகின்றன. ஆனால் உருப்படியான பயன் எதுவும் ஏற்படவில்லை.

றுவாண்டாவுக்குத் திரும்பிச் சென்றால் துட்சி(Tutsi) இனப் போராளிகளால் கொல்லப்படலாம்என்றுஹூத்து(Hutu) இன அரசியல் தலைவர்களும் துட்ஸி இனப்போராளிகளுக்கு அஞ்சி ஸயருக்குள் வந்துள்ள ஹூத்து இன இராணுவத்தினரும் அகதிகள் மத்தியில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

### கண்கள் தோண்டப்படுவதாக பிரசாரம்

றுவாண்டாவுக்குள் செல்லும் ஹூத்து இன மக்களின் கண்கள் தோண்டப்படுவதாகவும்—வயிறு குத்திக் கிழிக்கப்படுவதாகவும் இட்டுமிட்டுப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோமாவில் உள்ள அகதி முகாம்களில் தற்போதும் தினமும் நூற்றுக்கணக்கான அகதிகள் வாந்தி — பேதி நோயினாலும் வயிற்றோட்டத்தினாலும் இறந்து வருகின்றனர்.

புத்தாண்டு பிறந்த இரண்டு வாரங்களில் மட்டும் [illegible] பினால் இறந்துவிட்டனர். தினமும் [illegible] வரை மரணமடைகின்றனர்.

இப்படி ஒரு மோசமான நிலைமை உருவாகி வருகின்ற போதும், இதுவரை உத்தியோகபூர்வ எல்லை ஊடாக கோமா அகதி முகாம்களில் இருந்து றுவாண்டாவுக்குள் சென்ற அகதிகள் எண்ணிக்கை 22 ஆயிரம் மட்டுமே. மேலும் 90 ஆயிரம் அகதிகள் புதர்கள் அடங்கிய வேறு பாதைகள் ஊடாக றுவாண்டா திரும்பி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

### வரலாறு

றுவாண்டாவில் உள்நாட்டு யுத்தம் மூளுவதற்கு முன்னர் ஹூத்து இன அரசாங்கமே பதவியில் இருந்தது.

துட்ஸி இனத்தவர்கள் சிறுபான்மையினர்.

ஆனால் சிறுபான்மை துட்ஸி இனப் போராளிகள் நன்கு பயிற்சி பெற்றவர்கள், பலம் வாய்ந்தவர்கள்.

றுவாண்டாவின் ஹூத்து இன ஜனாதிபதி பயணம் செய்த விமானம் கடந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் சிறுபான்மை துட்ஸி இனப் போராளிகளின் றொக்கெட் தாக்குதலுக்கு உள்ளானது. அதில் ஜனாதிபதி கொல்லப்பட்டார்.

இதற்கு பழிவாங்குமுகமாக ஹூத்து இன இராணுவம் சிறுபான்மை துட்ஸி இன மக்களைக் கொன்றுகுவித்தது.

துட்ஸி இனப் போராளிகள் ஹூத்து இன இராணுவத்துடன் போரிட்டு முழு நாட்டையும் தற்போது தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர்.

தோல்வி அடைந்த ஹூத்து இன இராணுவத்தினர் பாதுகாப்புத் தேடி ஸயருக்குள் தப்பி ஓடினர்.

அதேபோன்றே லட்சக்கணக்கான ஹூத்து இனத்தவர்களும் ஸயருக்குள் வந்து தொடர்ந்து அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர்.

இந்த அகதிகளை றுவாண்டாவுக்குள் திருப்பி அனுப்பவே தற்போது சகலமட்டங்களிலும் முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன.

ஹூத்து இன அகதிகளை றுவாண்டாவுக்குள் திருப்பி அனுப்பும் முயற்சிகள் தோல்விகண்டு வருவதாக யு. என். எச். சி. ஆர். பேச்சாளர் றே வில்க்கின்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஏப்ரலில் இருந்து ஜூலை வரையிலான நான்கு மாத காலத்தில் மூன்றரை லட்சம் துட்ஸி இன மக்கள் கொல்லப்பட்டிருப்பதால், தாம் நிச்சயம் பழிவாங்கப்படலாம் என்று ஹூத்து இன அகதிகள் நம்புகிறார்கள்.

சிறுபான்மை துட்ஸி இனப் போராளிகள் றுவாண்டாவின் தலைநகர் கிக்காலியில் அரசு ஒன்றை நிறுவி உள்ளனர்

இன அழிப்பில் சம்பந்தப்படாத அப்பாவி ஹூத்து இன மக்கள் பீதி அடையத்தேவை இல்லை என்று புதிய அரசாங்கம் அறிவித்துவருகிறது.

ஆனால் றுவாண்டா திரும்பும் ஹூத்து இன மக்களின் எண்ணிக்கை வாந்திபேதி நோய் அழிவுகளின் மத்தியிலும் மிகவும் குறைவாகவே இருப்பதாக றுவாண்டாவுக்கான ஐ. நா. படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் றோமியோ டலாய்றே தெரிவிக்கிறார். (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆசிரியருக்கு பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஜன. 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. அங்கு கற்கும் மாணவர் தொகைக்கேற்ப ஆசிரியர் தொகை இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது மட்டக்களப்பு நகரை அண்டிய பாடசாலைகளிலும் முஸ்லிம் பாடசாலைகளிலும் தேவைக்கதிகமாக ஆசிரியர்கள் உள்ள அதே வேளை—

தமிழர்கள் செறிந்து வாழும் கிராமப்புறங்களில் ஆசிரியர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். சில பாடசாலைகளில் அதிபரும், ஒரு ஆசிரியரும் மட்டுமே கல்வி கற்பிக்கும் நிலை உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பக் கல்விக்காக 488 ஆசிரியர்களும், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு 201 ஆசிரியர்களும் ஆங்கில பாடத்திற்கு 246 ஆசிரியர்களும் தேவைப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. தமிழர் செறிந்து வாழும் கிராமங்களில் 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரே கடமை புரிகின்றனர். சில இடங்களில் 57 மாணவருக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாசாரமும் காணப்படுகிறது. கடந்தகால வன்செயல்களால் பாதிக்கப்பட்ட, சேதமாக்கப்பட்ட பாடசாலைகளுக்கு எதுவித வசதிகளும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை. என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [ஐ]

## 6 இலட்சத்து 75 ஆயிரம் கோழிகளுக்குத் தடுப்பூசி

### கடந்த ஆண்டு ஏற்றப்பட்டது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து கால்நடைகளுக்கான நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

கடந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் மட்டும் 6 இலட்சத்து 75 ஆயிரத்து 534 கோழிகளுக்கு கொள்ளை நோய்த் தடுப்பூசியும், 6 ஆயிரத்து 825 கோழிகளுக்கு அம்மை நோய் தடுப்பூசியும், 4 ஆயிரத்து 116 கோழிகளுக்கு தொண்டையடைப்பான் நோய்த் தடுப்பூசியும் ஏற்றப்பட்டுள்ளது.

நோய் வருமுன் தடுப்பதே உயர் உற்பத்திக்கான சிறந்த வழி. எனவே சகல கால்நடை வளர்ப்போரும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனச் செயலகங்களுடன் அல்லது கால்நடை உற்பத்தி சுகாதார நிலையங்களுடன் தொடர்பு கொண்டு கால்நடைகளுக்கு தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது. [ஐ]

## சுகாதாரத் திணைக்களத்தை மேம்படுத்தத் திட்டம்

தென்மராட்சி, ஜன. 27

தென்மராட்சிப் பிரதேசத்தில் சுகாதார திணைக்களத்தைத்மேம்படுத்துவதற்கு ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களும், தென்மராட்சிப் பகுதியில் புதிய கிராமிய வைத்திய சாலைகளும் ஆரம்ப சுகாதார நிலையங்களும் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## கொப்பிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி பகுதியில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட சுமார் 500 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் அண்மையில் இலவசமாக வழங்கப்பட்டன.

லண்டன் ஸ்கொட் நிறுவனம் வழங்கிய நிதியிலிருந்து சுமார் 25, ஆயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசப் புத்தகங்கள் ஆதிசக்தி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கத்தினால் வழங்கப்பட்டன. [ஐ]

## கைப் பம்புகள் அன்பளிப்பு

சண்டிலிப்பாய், ஜன. 27

வட்டுக் கோட்டை லயன்ஸ் கழகம் சித்தன்கேணியில் இயங்கி வரும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கும், சித்தன்கேணி கணேச வித்தியாலயத்திற்கும் கையால் இயங்கும் நீர் பம்பிகளை அன்பளிப்பாகநிறுவிக்கொடுத்துள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி இக் கைப்பம்புகள் சம்பிரதாய பூர்வமாக இயக்கி வைக்கப்படும் என வட்டுக் கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்வைபவத்தில் கொழும்பிலிருந்து இங்கு வரவுள்ள லயன். எஸ். சிவபாதசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

# திருக்கேதீஸ்வரம் ஆலய சூழலில் மீண்டும்மக்கள் குடியேற அனுமதிக்குக

### அகில இலங்கை இந்துமாமன்றம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 27

பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலய சுற்றாடலில் கிராம மக்கள் மீளக் குடியமர்வதற்கும், மதகுருமார் ஆலயக் கிரியைகளை நடத்துவதற்கும் ஏற்ற சூழலை ஏற்படுத்தித் தருமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வாரம் கலாசார, சமய விவகார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியைச் சந்தித்த சமயமே அகில இலங்கை இந்து மன்றத்தின் பிரதிநிதிகள் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது இராணுவத்தினர் திருக்கேதீச்சரத்தில் முகாம் இட்டுள்ளதால் கடந்த பல வருடங்களாக பூசைகள் எதுவும் இன்றி ஆலயம் பூட்டிய நிலையில் உள்ளமை தெரிந்ததே.

முக்கிய சமய நாட்களில் மட்டும் குறிப்பிடத்தக்க அளவு பக்தர்கள் அங்கு செல்ல படையினர் அனுமதித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வளர்ப்பு நாய்களுக்கு லைசென்ஸ்: ஒத்துழைப்பு வழங்கக் கோரிக்கை

யழ்ப்பாணம், ஜன. 27

யாழ். மாநகரசபை பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கான உரிமம் (லைசன்ஸ்) வழங்கும் பணியை மாநகரசபை தொண்டர்கள் வீடுவீடாகச் சென்று மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் மக்களிடம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

மாநகரசபை பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களை பிடித்தழித்து, பொதுமக்களையும், பள்ளிச்சிறார்களையும் விசர்நாய்க்கடி போன்ற ஆபத்திலிருந்து பாதுகாக்கின்ற பணியை மாநகரசபை சிறப்பாக செயற்படுத்தி வருகின்றது கடந்த வருடங்களில் பாரிய அளவிலான கட்டாக்காலி நாய்கள் எம்மால் பிடித்து அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதேசமயத்தில் மக்கள் தமது வீட்டில் பிரியமாக வளர்க்கின்ற நாய்களை பதிவு செய்து காலத்துக்குக்காலம் அவற்றிற்கான விசர்நாய்த் தடுப்பூசி ஏற்றி பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் எமக்குள்ளது. கடந்த காலங்களில் எமது நகரத்தில் வளர்க்கப்படுகின்ற நாய்கள் பற்றிய தரவுகள் முழுமையாக கிடைக்கப் பெறாமையினால் போதிய தடுப்பு மருந்துகளை பெற்று இச்சேவையை முழுமையாக செய்வதில் சிரமம் இருந்தது. தற்சமயம் மாநகரசபை தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று நாய்களை பதிவுசெய்கின்ற நடவடிக்கையை மேற்கொள்கிறார்கள். இந்த அடிப்படையான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு பொதுமக்களும் இவ்விடயத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குகின்ற போதிலும், ஒருசில மக்கள் தாம் வளர்க்கும் நாய்களை பதிவுசெய்ய முன்வருகிறார்களில்லை என அறியப்படுகிறது.

நீங்கள் செல்லமாக வளர்க்கின்ற இப்பிராணிகளை முறையாகவும், பாதுகாப்பாகவும் வளர்ப்பதற்கு நாம் வழங்கக்கூடிய ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளுவதற்கு ஏதுவாக அவற்றை முதற்காரியமாக பதிவுசெய்து ஒத்துழைப்பு வழங்குமாறு வினயமுடன் கேட்டுக்கொள்கிறோம்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-3]

# உள்ளீடுகள் விவசாயிகளுக்கு கிடைக்க உதவும் கமக்காரர் அறிமுக அட்டை

வடதமிழீழத்தில் உற்பத்தி சார் நடவடிக்கைகளை ஊக்குவித்து தற்சார்பு பொருண்மியக் கட்டமைப்பினை உருவாக்குவதற்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறான திட்டங்களில் கமக்காரர் அறிமுக அட்டைத் திட்டமும் ஒன்றாகும்.

கமநல சேவைத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கமக்காரர் அறிமுக அட்டையானது ஒரு குடும்பத்தில் ஒன்றிற்கும் மேற்பட்டவர் களிற்கும் அறிமுகஅட்டை வழங்கப்பட்டு இருந்தமையால் அக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் புதிய ''கமக்காரர் அறிமுக அட்டைகள்'' வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இரண்டாம்கட்ட ஈழப் போர் ஆரம்பித்த பின்னர் ஸ்ரீலங்கா அரசானது தமிழீழத்தின் விவசாயம் சார் உற்பத்திகளைத் திட்டமிட்ட முறையில் உடைத்தெறிய பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. இவற்றுள் முக்கிய விவசாய உள்ளீடுகளான கம இரசாயனங்கள், உரவகைகள், விதை பொருட்கள், எரிபொருள் போன்றவற்றை எடுத்து வர தடைவிதித்ததும், மேலும் சில காலங்களில் மிகக் குறைந்த அளவில் முக்கிய விவசாய உள்ளீடுகளை கொண்டு வர அனுமதித்தமையுமாகும். அவ்வாறு கொண்டுவரப்பட்ட உள்ளீடுகள் விநியோகத்தில் பல குறைபாடுகள் காணப்பட்டது.

அவை,

1. கூடிய இலாபத்துடன் விற்கப்பட்டமை.
2. காலாவதியான கம இரசாயனங்கள் விற்கப்பட்டமை.
3. உரிய நேரத்தில் உள்ளீடுகள் வழங்கப்படாமல் காலம் தாழ்த்தி விற்பனை செய்யப்பட்டமை.
4. செயற்கை தட்டுப்பாடுகளை விவசாய உள்ளீடுகளின் விலைகளை அதிகரிக்கச் செய்தமை

போன்ற நடவடிக்கைகளால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். எனவே மிகக் குறைந்த அளவில் கொண்டுவரப்படும் உள்ளீடுகளைச் சரியான முறையில் சகல விவசாயிகளுக்கும் கிடைக்கக் கூடியவாறு நடைமுறைப்படுத்தவே கமக்காரர் அறிமுக அட்டைத் திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

### நோக்கம்

1. வட தமிழீழத்திற்கு கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட உள்ளீடுகளை விவசாயிகளுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்குதல்.
2. அரச / அரசசார்பற்ற நிறுவனங்களின் விவசாய உள்ளீட்டுப் பொருள்களில் விநியோகங்களையும், உதவித் திட்டங்களையும், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.
3. விவசாய பயிர்செய் நடவடிக்கைகள் பாதிக்கப்படாமல் உரிய காலத்தில் உள்ளீடுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
4. வட தமிழீழத்தில் உள்ள விவசாய வளங்களை அடையாளங் கண்டு திட்டமிட்ட முறையில் பயன்படுத்தி விவசாய உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல்.

போன்ற காரணிகள் இத் திட்டத்தின் நோக்காகக் கொள்ளப்பட்டது.

### கமக்கார அறிமுகஅட்டையின் பயன்பாடு

1. அரச / அரச சார்பற்ற நிறுவனங்களும் மற்றும் தனியார் நிறுவனங்களும் இக் கமக்காரர் அறிமுக அட்டையினூடாக விவசாய உள்ளீட்டுப் பொருள் விநியோகங்களை மேற்கொள்ளுவதனால் குறித்த ஒரு விவசாயி குறித்த ஒரு உதவியினை ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் பெற்றுக் கொள்வதனைத் தடுத்தல்.
2. விவசாயம் மீதான முதலாளித்துவ பொருளாதாரத் தலையீட்டைக் கட்டுப்படுத்தல்.
3. விவசாயம் சம்பந்தமான புள்ளி விவரத் தரவுகளை ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளல்.
4. நீண்ட கால அடிப்படையில் திட்டமிட்ட பயிர்ச் செய்கை முறைகளை நடைமுறைப்படுத்தல்.
5. காணிகளிற்கு இலக்கமிடும் முறைமூலம் உள்ளீடுகள் பெற்ற விவசாயி அதனைச்சரியான முறையில் பயன்படுத்துகின்றாரா? என்பதனைக் கண்காணித்தல்.
6. விவசாய நிலங்களின் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல் என்பன இதன் முக்கிய பயன்களாக அமைகிறது.

### கமக்காரர் அறிமுக அட்டை பெற்றுக் கொள்வது தொடர்பான பொதுவான விநியோக நடைமுறைகள்

1. குடும்பபதிவு அட்டையை மூலாதாரமாகக் கொண்டே விண்ணப்பப் படிவம் நிரப்பப்படல் வேண்டும்.
2. ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு அட்டை என்ற அடிப்படையிலேயே வழங்கப்படும் (குடும்ப அங்கத்தவர் எவர் விவசாயத்தை மேற்கொண்டிருப்பினும்)
3. பயிர் நிலங்கள் எந்தப் பிரிவில் இருந்தாலும் விண்ணப்பதாரி தற்பொழுது வசிக்கும் கிராமிய உற்பத்தி குழுப் பிரிவிலேயே இவ் அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
4. விவசாயிகள் எந்தக் கிராம சேவகர் பிரிவில் வசிப்பவராக இருப்பினும் இவர் பயிர் செய்யும் காணி எந்தக் கிராம சேவகர் பிரிவில் அமைந்து உள்ளதோ அந்தப் பகுதிக்குரிய உற்பத்திக் குழுவே அவரது காணிப் பயிர்ச்செய்கை விவரங்களை உறுதிப்படுத்தல் வேண்டும்.
5. தமிழீழ மக்களின் பொருண்மிய மேம்பாட்டிற்கு வழி கோலும் வகையில் செயற்படும் அமைப்புக்களின் பண்ணைகளைப் பொறுத்த வரையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட செயலகத் திற்கு விண்ணப்பிக்கும் விசேட விண்ணப்பத்தின் பேரில் அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.
6. காணிகளை இனங்காணாத விடத்தும் பொது அமைப்புக்களிற்குச் சொந்தமானவையாக அக் காணிகள் அமையுமிடத்தும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நேரடியாகவோ அல்லது இயக்கத்தின் பிற அமைப்புக்களின் ஊடாகவோ செய்கைக்காக ஒப்புவிக்கப்பட்ட மீளப் பெறும் உரித்துடைய காணிகள் செய்கையில் ஈடுபட்டிருப்பவர்களிற்கும் கமக்காரர் அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

### கமக்காரர் அறிமுக அட்டை பெற்றுக் கொள்வதற்கான வழி முறைகள்

விண்ணப்பப் படிவங்களை 5/- செலுத்தி அவ் அப் பகுதி கிராமிய உற்பத்திக் குழுவிடமிருந்து பெற்று, அப்பகுதிக் குழுவின் உதவியுடன் சரியான முறையில் தெளிவாக நிரப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்படும் நெற்காணி, மேட்டுக்காணி என்பனவற்றிற்கான காணிப் படங்களையும், (அக் காணிக்கு நேரடியாகச் செல்லக் கூடிய வகையில்) விண்ணப்பதாரியின் 3½'' 2½'' அளவிலான கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட இரண்டு புகைப்படம், பிரதிகளையும் இணைத்து கிராமிய உற்பத்தி குழுவிடம் ஒப்படைக்க வேண்டும்.

உற்பத்திக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களைச் சரி பார்த்து, உறுதிப்படுத்தி அக் கிராமிய உற்பத்திக் குழு தலைவர்/செயலாளர் ஒப்பமிடுவார். ஒப்பமிடப்பட்ட விண்ணப்பப்படிவம், புகைப்படம், காணி படம் என்பன வட்டப் பதிவாளரிடம் ஒப்படைக்கப்படும்.

வட்டப் பதிவாளரினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது புள்ளி விபரத் தரவுகளுடன் சரிபார்க்கப்பட்டு, அவற்றிற்கான காணி இலக்கம் கொடுக்கப்பட்டு காணி இடாப்பில் பதிவுகள் மேற் கொள்ளப்படும். அட்டைகள் எழுதப்பட்டு பட்டியல்படுத்தப்பட்ட ஒழுங்கில் விநியோகத்திற்காக அக் கிராமிய உற்பத்திக் குழுவானது உரியவரிடம் அவ் அட்டையினை ஒப்படைப்பார்கள். இவ் அட்டையானது 25/-பெறுமதியுடையதாகும்.

விநியோக நடைமுறையுடன் தொடர்புடையவர்களும் அவர்களின் கடமைப்பாடும்.

### கிராம சேவகர்

விண்ணப்பப் படிவத்தில் ஒட்டப்படும் புகைப்படத்திலும், அடையாள அட்டையில் ஒட்டும் புகைப்படத்திலும் விண்ணப்பதாரர் நிரந்தர வசிப்பாளரா அல்லது தற்காலிக வசிப்பாளரா என்பதை உறுதி செய்தல்.

### கிராமிய உற்பத்திக் குழு

1. கமக்காரர் அறிமுக அட்டையில் முக்கியத்துவத்தை தமது கிராம விவசாயிகளுக்கு எடுத்து விளக்குதல்.
2. விண்ணப்பதாரி தமது பிரிவில் நிரந்தர வசிப்பாளரா? அல்லது தற்காலிக வசிப்பாளரா என்பதை இனங்கண்டு சிபார்சு செய்தல்.
3. விணணப்பதாரியால் தரப்பட்ட காணியின் அமைவிடமும், விஸ்தீரணமும் மற்றும் குத்தகையா/ சொந்தமானதா? என்பதையும் குடும்ப விவரமும் உண்மையானதா? என்பதையும் சிபார்சு செய்தல்.
4. ஒரே குடும்பத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட கமக்காரர் அறிமுக அட்டைக்கு விண்ணப்பிக்கப்படுகிறதா? என்பதை அவதானித்தலும் அவ்வாறு நடைபெறாமல் இருப்பதனை உறுதிப்படுத்தலும்.
5. கமக்காரர் அறிமுக அட்டை வழங்கப்பட்ட பின்னர் விண்ணப்பதாரியின் குடும்பத்தில் நில உடைமைகளில் ஏற்படும் மாற்றம், பயிர் செய் நிலப்பரப்பில் ஏற்படும் மாற்றம், நில உரிமையாளர்களுக்கும், குத்தகையாளர்களிற்கும் இடையில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி உடனுக்குடன் வட்டத் தொடர்பாளரின் கவனத்திற்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

### வட்டப் பதிவாளர்

1. விண்ணப்பப் படிவங்களை ஏற்றுப் பயிர்ச் செய்கைக் காணி இடாப்பில் பதிவுகளை மேற் கொள்ளல்.
2. விண்ணப்பதாரரால் தரப்படும் விண்ணப்பத் தரவுகள் புள்ளி விபரக் கிளையால் சேகரிக்கப்பட்ட தரவுகளுடன் ஒப்பு நோக்கி சரி பார்த்து உறுதிப்படுத்தல்.
3. உறுதிப்படுத்தப்பட்ட மேற்படி தரவுகளைக் கொண்டு காணிப்பதிவேடு தயாரித்தல்.
4. பதிவு செய்யப்பட்ட காணிப் பதிவேட்டு இடாப்பானது உரிமைக் கோரிக்கைகளுக்காகவும், ஆட் சேபனைக்காகவும் பதிவின் பின்பு குறித்த விவசாயிகளின் பார்வைக்கு ஒரு வாரம் அவ்வக் கிராம சேவகர் பிரிவுகளில் வைத்துக் கண்காணித்தல்.
5. கமக்காரர் அறிமுக அட்டையினை விநியோகித்தல்.
6. கமக்காரர் அறிமுக அட்டை பேணப்படுவதைக் கண் காணித்தல்.
7. இது தொடர்பான பதிவுகள் அனைத்திற்கும் பொறுப்பாயிருத்தல்.
8. ஆட் சேபனைகள் பெறப்படும் போது அவற்றைத் திருத்தியமைத்து இணைப்பாளரின் உறுதிப்படுத்தலுக்காக சிபார்சு செய்தல்வேண்டும்.
9. உறுதிப்படுத்தப்பட்ட பின் அறிமுக அட்டையின் காணிப் பதிவேட்டிற்கமைய பூரணப் படுத்தி கோட்ட இணைப்பாளரின் ஒப்பத்துடன் வழங்குதல்.
10. விநியோகிக்கப்படும் இந்த அட்டையை வருடா வருடம் புதுப்பித்து வழங்க ஆவன செய்தல்.

(தொடரும்)

## வட்டு. லயன்ஸ் கழகத்தின் 17 ஆவது ஆண்டு விழா

சண்டிலிப்பாய், ஜன. 27

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவுவிழா நாளை மறுதினம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வட்டுக்கோட்டை — சித்தன்கேணி வீதியிலுள்ள கழகத்தின் தொழிற்பயிற்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கழகத்தின் தலைவர் டாக்டர் க. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பிரதம அதிதியாக கொழும்பு 306B மாவட்ட ஆளுநர் லயன். எஸ். சிவபாதசுந்தரம் கலந்து கொள்வார்.

இவ்விழாவில் வட்டுக் கோட்டை இந்துக்கல்லூரி மாணவர்களின் சைக்கிள் தரிப்பு நிலையத்தின் புனரமைப்புக்கு 5 ஆயிரம் ரூபா நிதியும், அராலி இந்துக் கல்லூரியின் நீர் இறைக்கும் இயந்திரத்தின் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கான நிதிஉதவியும் அன்பளிப்பு செய்யப்படவுள்ளன.

கழகம் நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில்பரிசு பெற தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பரிசில்களும், விழாவில் வழங்கப்படவுள்ளன. (ஐ-135-106)

## நமக்கு நன்மை எது?

### ஞானக்கதிர்

தீமையும் நன்மையும் நமது வினைப்பயனுக்கேற்ப வந்து சேரும். ''தீதும் நன்றும் பிறர் தா வாரா'' வென்பது புறநானூற்றுப் பாடல் அடி.

ஒருவருடைய பெருமைக்கும் ஒருவருடைய சிறுமைக்கும் அவரே காரணமாகிறார். அவருடைய செயல்களே உரை கல்லாக அமைகின்றன. இதனைத் திருவள்ளுவர்

''பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங் கருமமே கட்டளைக கல்'' எவகிறார்.

நமக்கு நன்மை செய்யும் பொறுப்பை நமமிடமே விட்டிருக்கிறான் இறைவன். எனவே நமக்கு நாமே நல்லவர்களாக இனியவர்களாக இருக்கின்றோம் எனினும் நமது அறிவு பூரணமான ஒன்றாக இல்லாத காரணத்தால் நமக்கு நன்மை என்று நாம் செய்யும் செயலே தீமையாக முடிந்து விடுவதும் உண்டு. எனவே நமக்கு நன்மை எது என்று அறிந்த ஒருவரிடம் நாம் சரணடைந்து விடுவது அறிவுடைமையாகும்

திருநாவுக்கரசு சுவாமிகள் என்னைவிட எனக்கு இனிமையானவர் மானுடரில் எவரும் இல்லை. ஆனால் என்னையும் விட இனியவன் ஒருவன் இருக்கிறான். அவன் யாரெனில் என் உடம்புக்குள்ளே மூச்சு ஆகி வெளியிலே வந்தும் உள்ளே போகியும் எனக்குள் நிற்கும் திரு இன்னம்பர்ப் பெருமானே யாவான் என்கிறார்.

இக் கருத்தைக் கொண்ட தேவாரம் இதுவாகும்:

என்னி லாரும் எனக்கினி யாரில்லை என்னி லும்இனி யான்ஒரு வன்உளன் என்னு ளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்(கு) என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே.

நாம் செய்த வினைப் பயனை நாம் அனுபவித்தே தீர்க்க வேண்டும். வினையை வெல்லும் ஆற்றல் நமக்கில்லை நாம நமக்கு இனியவராக இருப்பினும் நமது வினையை வெல்ல இறைவன் திருஅருளை நாட வேண்டி இருக்கிறது எனவே திருநாவுக்கரசு சுவாமிகள் நமது வினையை நீக்க வல்ல இறைவனை என்னிலும் இனியான் என்றான்.

சிறுவயதில் நமக்கு இன்பம் செய்த பொருள்களிற் பல இளமையில் இன்பம் செய்வதில்லை. இளமையில் நமக்கு இனபம் செய்த பொருள்களிற் பல முதுமையில் இன்பம் செய்வதில்லை. ஆனால் இறைவனோ குழந்தைப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம் எல்லாப் பருவங்களுக்கும் இன்பம் செய்கிறான். இனிமையாகிறான். அதனால் திநாவுக்கரசு சுவாமிகள் ''என்னிலும் இனியான்'' என்றார்.

இறைவனைப் பார்த்து ''விட்டிடுதி கண்டாய் விடிலோ கெடுவேன்!'' என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள் ''நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவதொன்றேயும் இலலை'' என்றார் அபிராமிபட்டர்.

எது நன்று எது தீது என்று அறிய முடியாத நாம் இறைவனைப் பார்த்து ''இறைவா! எங்களை விட்டு விடாதே! நீ விட்டால் நாங்கள் கெட்டு விடுவோம்!'' என்று வேண்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ★

செல்வி பா. பாரதி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

கங்கேரியன் இல்க்கிப் பிராமா குஞ்சுகள், அடை முட்டை, கோழி, வீரர்த்துக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: த முத்தையா, 185, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [8207]

**தேவை**

எமது இரு குழந்தைகளை முழுநேரம் பராமரிப்பதற்கு உடனடியாக வீட்டுப்பணிப் பெண் தேவை. தகுந்த வேதனம் வழங்கப்படும். தொடர்பு: 56A, மணிக் கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (34834)

வேலன் மசல் வேலையில் அனுபவமுள்ள மெக்கானிக் கும், ரிங்கரும் தேவை. சிவ லிங்கம் மோட்டோஸ், 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பா ணம். (8213)

**வகுப்புகள்**

O/L 95 சமஸ்கிருதம், சிங் களம் கற்பிக்கப்படும். தொடர்பு: கவிஞர் பாவை யூர் தேவதாசன், இல. 128A, கண்டி வீதி, யாழ்ப்பாணம் (யாழ். கச்சேரிக்கு முன்பாக), அன்னக்கிளி ஹோட்டல் அருகில்). [34859]

**தட்டச்சு வேலைகள்**

சகலவிதமான தமிழ், ஆங்கில தட்டச்சுவேலைகளும், சேவையடிப்படையில் குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும். இடம்: அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம், 106, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப் பாணம். (சி–427)

**புலமைப் பரிசில் – 95**

யாழ். Bond நிறுவனத்தா ரால் ஆண்டு 5 புலமைப்பரி சில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ் விடைகளுடன் 10/– மட்டும்) மாதத்தில் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமை களில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங் களில் பெற்றுக்கொள்ளலாம். [8187]

**காணவில்லை**

23-1-95 திங்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குச் சென்ற கர வெட்டியைச் சேர்ந்த நடேசன் சிவநாதனை (வயது26) காணவில்லை. இவர் மன நோயாளியாவார். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர் கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். சி. சக்திவேல், தோல் சிகிச்சை மருந்தகம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். (34858)


## கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டில் இம்மாதம் 2 ஆம் திகதியிலிருந்து பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த ஒரு நாள் சேவைக்காலப் பயிற்சி வகுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி வகுப்பு எதிர் வரும் 11 ஆம் திகதி நடைபெறும் என யாழ். வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)


**G. A. Q.**
**B. A. part – I**

வரலாறு

விரிவுரைகள்

ஆரம்பம்:
**28–01–1995**
(1 மணி)

விவரங்களுக்கு;
S. அருள்நங்கை

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-319)


# ஓராண்டு நினைவலைகள்



## திருமதி செல்லையா தங்கம்மா
(வேலணை)

அன்னையின் மடியில்: 1914–08–12
ஆண்டவன் அடியில்: 1994–02–07

**திதி: 1995 – 01 – 27**

பெற்றெடுத்துப் பெயரிட்டுப் பேணிக்காத்து
பிரியமுடன் வளர்த்த எம் தாயே!
நீங்கள் முற்றியது கடமை என்றோ
ஓடிச் சென்றீர்கள் அம்மா!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
ஆறிடுமா அம்மா எம் இதயம்
மீண்டும் வரும் நினைவலையால்
உருகி அழும் எம் உள்ளம் எந்நாளும்
உங்களையே எண்ணுதம்மா
இரும்பாக்கி எம்மனத்தை இருக்க
நினைத்தாலும் கரும்பான உங்கள்
நினைவுகளே கண்முன்னே நிழலாடுதம்மா
நடமாடும் வீட்டில் இன்று
படமாகி விட்டீர்கள் அம்மா!

உங்கள் ஆன்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கலைவாணி மில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(34856)

# ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்
## இ. ச. பேரம்பலம் (E. S. P.)
[காரைநகர், வாரிவளவு]

மலர்வு: 26 – 04 – 1926
உதிர்வு: 19 — 01 1993

**திதி: 27 — 01 — 1995**

அன்பின் திருவுருவாய் அறிவின் சிகரமாய்
ஆற்றலின் இருப்பிடமாய் அமைதியில் இமயமாய்
எங்கள்முன் பவனி வந்த ஏந்தலே, பெரியவரே!
எம்மைப் பிரிந்தீர்கள்? ஈராண்டாய்த் தவிக்கின்றோம்
பெருமையுடன் வாழ்ந்த எங்கள் வாழ்வுடன்
பெருந்தீக்கு விருந்தான தேனோ ஐயா?
பெற்றானாய் வற்றானாய் பெருமையுறு வர்த்தகராய்
''ஈ எஸ். பி.'' என்ற மூன்றெழுத்துக்கே –
மேன்மையாய்
கற்றானாய்! தலைவனாய்! கண்ணிறைந்த –
செம்மலாய்
வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தேவரோடு தேவராய் சென்றவரே நினைக்கின்றோம்
நின் ஆத்ம சாந்திக்காய் விநாயகனை துதிக்கின்றோம்.

E S. பேரம்பலம் குடும்பத்தினர்,
90, பஜார் லேன்,
யாழ்ப்பாணம்.

E. S. பேரம்பலம் சக நிறுவனம்,
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# 'படிப்பு' நூல் வெளியீட்டின் ஒரு வருட பூர்த்தி



"படியாதவன்"

''படிப்பு'' என்னும் ''படியாதவன்'' எழுதிய நூலுக்கு அணிந்துரைகள் வழங்கியவர்கள் பல்துறைகளில் பட்டங்களைப் பெற்ற படித்தவர்கள். எனவே ஏன் ''படியாதவன்'' இவ்வாறு படித்தவர்களால் போற்றப்பட்டான்? ஆங்கில நாடகக் கவிஞன் ஷேக்ஸ்பியர் கல்விக்கும் அதன் கோட்பாடுகளுக்கும் வரைவிலக்கணங்கள் வகுத்த சொக்கிரேற்றிஸ், பிளாற்றோ, விஞ்ஞானத்திற்கு வித்திட்ட மேதைகளாகிய கலிலியோ ஆக்கிமிடீசு, சேர் ஐசாக் நியூற்றன் எல்லாருக்கும் மேலாக உலகப் புகழ் பெற்ற திருக்குறளை வாரிவடித்துத் தந்த திருவள்ளுவர், இவர்கள் அனைவரும் பல்கலைக் கழகங்களில் படித்தவர்களா? அவர்கள் வாரிசில் வருபவன் தான் ''படியாதவன்.'' அதனால் ''படியாதவன்'' படித்தவன் என்னும் பதத்தின் கருத்திற்கு மேலாக வானில் மிளிர்கின்ற ஆதவன் போல் திகழ்கின்றான் என்றால் மிகையாகாது.

ஆறு அத்தியாயங்களை அடக்கியது ''படிப்பு'', ஒவ்வோர் அத்தியாயத்தையும் நான் வாசித்தேன். ஆசிரியன் அந்தந்த அத்தியாயத்திற்குரிய இலக்கையும், அது ஏன் விளைந்ததென்பதையும், அதை அடையும் வியாக்கியானங்களையும் தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளான். சுருங்கக்கூறின் ஒவ்வோர் அத்தியாயமும் கற்றல் – கற்பித்தல் என்பதனைப் பிரதிபலிக்கும் தளவாடிபோல தொழிற்படுகின்றது இறுதி அத்தியாயமாகிய ''ஐ ஓ பாவம்'', இன்று ஆசிரியர் குழாமும் மாணவர் குழாமும் படும்பாட்டை விவரிக்கின்றதாக அமைகின்றது. இங்கே யார் ஐ ஓ பாவம்? ஆசிரியர்களா! மாணவர்களா! பெற்றோர்களா! பெற்றோர்கள் மாணவர்கள் கற்கும் அவல நிலையைப் பார்த்து ஐ ஓ பாவம், மாணவர்கள் ஆசிரியர் கத்திப் படிப்பதைப் பார்த்து ஐ ஓ பாவம், ஆசிரியர் மாணவர் படும் கஷ்டத்தையும் ரியூஷனுக்கு வாரி வாரிப் பணம் கொடுக்கும் பெற்றோர்களையும் பார்த்து ஐ ஓ பாவம், என்று ஒருவரைப் பார்த்து ஒருவர் சொல்வதையும் உய்த்தறியக்கூடியதாக இருக்கின்றது. அவ்வத்தியாயம் இன்றைய கற்றல்: கற்பித்தலைப்பற்றி பார்க்கவைக்கும் நிலைக்கண்ணாடியாக இருக்கின்றதைக் காணலாம்.

இந்நூல் ஆசிரியன், ஒரு சிங்கம். அச்சமின்றி கூசாமலும், கோணாமலும் தனது வகுப்பறை அனுபவங்களின் நிமித்தம் கற்றல்-கற்பித்தல் என்பவற்றில் நேரிடும் குறைபாடுகளையும், இடர்களையும். பிறரால் ஏற்படும் குறுக்கீடுகளையும் திடசித்தத்துடன் வெளிக்கொணர்ந்தது இந்நூலுக்கு ஓர் அணிகலனாகும். இந்நூலை ஆசிரியர்கள், பட்டப்பின்படிப்பு ஆசிரியர்கள், மாணவ ஆசிரியர்கள், கல்விச்சிந்தனையுடையவர்கள் வாசித்தறியவேண்டியது அவர்களுடைய தலையாயகடனாகும். மேலும் கல்வியியலிற் பிரசித்திபெற்ற கல்வியியலாளரால் வாரிவழங்கிய கல்விக் கோட்பாடுகளும் வாக்கியங்களும் அநேகம் காணப்படுகின்றன. அவையும் ''படிப்பு''க்கு அணிகலமாகும். நானும் கல்வியைப் பற்றி தெரியாத விடயங்களை அவ்வாக்கியங்களுக்கூடாக அறிந்துள்ளேன். அதற்கு அவருக்கு எனது நன்றி உரித்தாகுக.

இறுதியாக ''படிப்பு'' ''படியாதவன்'' ஐ ஒரு கல்வியியல் கலாநிதி ஆக்கிற்று.

அ. கருணாகரர்,
முன்னைநாள் பிரதி அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

[சி-442]


**கீன்** கல்வி நிலையம்
திருநெல்வேலி

**A\L 95 DAY CLASS**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| அளவையியல் | — | திரு S. S. மனோகரன் |
| கணக்கியல் | — | திரு. சௌந்தி |
| வர்த்தகமும் நிதியும் | — | திரு. வரதன் |
| தமிழ் | — | திரு. காரை S. கெங்கா |

ஆரம்பம்: **30-01-95**
காலை 8 மணி

அனுமதிகள் முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
[C–321]



அகதிகள்புனர் வாழ்வு நிறுவனம்
நடத்தும்
உடையமைத்தல்
பயிற்சி நெறிக்கான
விண்ணப்பங்கள்
**கோரப்படுகின்றன**

தகைமைகள்: ஜி. சி. ஈ. (சாதாரண தரம்) வரை படித்திருத்தல் வேண்டும்
வயதெல்லை: 30

★ மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் 01 – 02 – 1995 அன்று காலை 9-00 மணிக்கு எமது காரியாலயத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

106, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
[சி–441]


# பதில் ஒழுங்குடனேயே லீவுக்கு விண்ணப்பிக்குக!

## ஆசிரியர்களுக்கு அறிவுறுத்து

வலிகாமம்தெற்கு, ஜன. 27

முறைப்படி லீவு விண்ணப் பப்பத்திரம் பூர்த்தி செய்யப் பட்டு பதில் கடமைக்கான ஒழுங்குகள் செய்யப்பட்ட பின்னரே ஆசிரியர்களுக்கான லீவு வழங்கப்படவேண்டும்: பதில் கடமை ஒழுங்கு செய்து முறைப்படி விண்ணப் பித்து லீவு பெறாது லீவில் நிற்கும் ஆசிரியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு உடுவில் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப் பாளர் திரு. சு. இரத்தின ராசா பாடசாலை அதிபர் களுக்கு பணிப்புரை விடுத் துள்ளார்.

மருதனார்மடம் இராம நாதன் கல்லூரியில் கடந்த புதனன்று நடைபெற்ற உடுவில் கல்விக் கோட்ட அதிபர் கள் கூட்டத்தில் உரையாற்று கையில் அவர் இந்தப் பணிப் புரையை விடுத்தார்

பாடசாலைவளவில் இருக் கும் சகல பௌதிக வளங் களும் மாணவர்களின் கல்விக வளர்ச்சிக்காக பயன்படுத்தப் பட வேண்டும். அவற்றில் இருந்து கிடைக்கும் வரு மானம் மற்றும் செலவு களுக்கு பதிவுகள் இருக்க வேண்டும்.

இவ்வாறு திரு. இரத்தின ராசா அதிபர்களிடம் தெரி வித்தார். (ஐ–152)


யாழ். றோட்டறிக் கழகம்
நடத்தும்
சர்வதேச றோட்டறியின்
**90 ஆம் ஆண்டு நிறைவு**
தமிழ்/ஆங்கிலப்
**பேச்சுப் போட்டி**

சர்வதேச றோட்டறியின் 90ஆம் ஆண்டு நிறைவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கான தமிழ், ஆங்கில பேச்சுப் போட்டிகளை எமது யாழ். றோட்டறிக் கழகம் நடத்தவுள்ளது.

**தலைப்புகள்:**

தமிழ்

1. மற்றவர்களுக்காகவும் வாழ்வோம்
2. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
3. தமிழிலக்கியங்களில் ஏலவே பொதிந்துள்ள றோட்டறியின் நோக்கங்கள்

ஆங்கிலம்

1. Live, Let Live,
2. Unity is Strength
3. Need for International Friendship

**போட்டி விதிகள்:**

14 முதல் 18 வயது வரையிலான பாடசாலை மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம்.

கீழே காட்டப்பட்ட மாதிரியில் அமைக்கப்பட்ட விண்ணப்பத்தை தயாரித்து உரியவாறு பூர்த்திசெய்து தாம் பயிலும் பாடசாலையின் அதிபர் அல்லது உப அதிபரைக் கொண்டு உறுதிப் படுத்தி, கீழ்க்கண்ட முகவரிக்கு இம் மாதம் 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேற்புறத்தில் ''சர்வதேச றோட்டறியின் 90 ஆம் ஆண்டு நிறைவு பேச்சுப் போட்டி'' / ''Oratorical Contest for the 90th Anniversary of Rotary International'' எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

பேச்சுக்கான நேரம் 5 முதல் 7 நிமிடங்களாகும்.

தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் தனித் தனியே முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கான தங்கப்பதக்கப் பரிசில்கள் 90 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படும்.

போட்டி முடிவுகள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்,

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

சர்வதேச றோட்டறியின்
90ஆம் ஆண்டு நிறைவு பேச்சுப் போட்டி

முழுப் பெயர்: ........................................
பிறந்த திகதி: .................... பால்: ..............
பாடசாலை: .................... தரம்: ..............
வதிவிட முகவரி: ........................................
பேச்சுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மொழி:
........................................

........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**உறுதிப்படுத்துதல்:**

இவ்விண்ணப்பதாரியினால் மேலே தரப்பட்ட விவரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி செய்கிறேன்.

.............................. ..............................
கையொப்பம் திகதி

அதிபர் / உப அதிபர்
..............................
..............................

தலைவர்,
யாழ். றோட்டறிக் கழகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி–120)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சொல்லும் செயலும்

உள்நாட்டுப் பிரச்சினை காரணமாக அதிகமான மக்கள் உயிரிழந்த நாடு இலங்கையே!

இந்தத் தகவலை வெளியிட்டிருப்பது ஐக்கிய நாடுகள் சபை.

ஐக்கிய நாடுகள் சபை பிரசுரித்த மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையில் உள்ள விவரத்தைக் கூறிக் கவலைப்பட்டிருப்பவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இந்த அவப் பெயரை நீக்க வேண்டும். அதன் பொருட்டு வடக்கு – கிழக்கில் நடக்கும் போரை நிறுத்த வேண்டும். இந்தப் போர் அநாவசியமானது. போரை நிறுத்தி சமாதானத்தை உருவாக்குவது அரசாங்கத்தின் கடப்பாடு. அதனால் தற்போதைய நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்குத் தீர்வு ஒன்று காணப்பட்டாக வேண்டும்.

இவ்வாறு சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு அக்கடெமியின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, சென்னையிலிருந்து வெளிவரும் இந்துப் பத்திரிகைக்கு அளித்த செவ்வி ஒன்றில், சமாதானத்தைக் காண்பதற்காகத் தாம் நீண்ட தூரம் செல்லவும் தயார் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

அவருடைய இந்தக் கருத்துக்கள் மிகவும் வரவேற்கத்தக்கவை. தமிழ் மக்களும் சரி, சிங்கள மக்களும் சரி விரும்புவதும் இவையே.

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும், போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதில் ஜனாதிபதி அக்கறையாக இருப்பதை அவரது பேச்சுக்கள் எப்போதுமே ஊர்ஜிதம் செய்பவையாகவே உள்ளன.

ஆனால் செயல்கள் தான்... பலவித சந்தேகங்களையும் நம்பிக்கையின்மையையும் உண்டாக்குகின்றன. ஆகையால் அடிக்கடி சொல்வதை நிறுத்தி செயலில் காட்டுவதற்கு ஜனாதிபதி முயற்சி செய்ய வேண்டும்.

மனம் உண்டானால் இடம் உண்டு என்பார்கள். ஆனால் சந்திரிகாவிடம் மனம் இருப்பதாகக் காட்டப்பட்டாலும், இடம் இருப்பது என்பது மிக மெல்லியதாகவே தெரிகிறது.

இதற்குக் காரணம் என்ன? தாம் நினைப்பதனைச் செய்வதற்கு அவருக்குப் பல முட்டுக்கட்டைகள் இருப்பதாலேயே அவரால் அவ்வாறு செய்ய முடியவில்லை என்பதா?

நாட்டின் நன்மை கருதி, நாட்டு மக்களின் நலன் கருதி செய்ய உத்தேசிக்கும் நியாயமான பணிகளுக்கு ஏனைய சக்திகள் முட்டுக்கட்டை போடுவதை தடுத்து அந்தச் சக்திகளை வெல்வது தான் திறமையான தலைமைத்துவம். அத்தகைய தலைமைத்துவத்திலேயே மக்களும் நம்பிக்கையும் அபிமானமும் கொள்வர்.

அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஆரம்பித்த பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் இல்லாமல் தடக்குப்பட்டுத் தாமதப் படுவதானது —

தமக்கு முட்டுக்கட்டை போடும் சக்திகளை வெல்லும் திறமை சந்திரிகாவிடம் இல்லையோ என்ற சந்தேகத்தை மக்களுக்கு உண்டாக்குகிறது. இது சந்திரிகாவின் தலைமைத்துவத்தில் மக்களுக்கு அவநம்பிக்கையை உண்டாக்கும்.

எனவே, ஜனாதிபதி தாம் சொல்வதை செயலாக்குவதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இனப்பிரச்சினை விவகாரத்தில் சொல்வதைக் குறைத்து செயலை அதிகரிக்க வேண்டும். தமது குறிக்கோளுக்கு எதிராக உள்ளவர்களை வெல்லுவதற்கு உகந்த வழியில் உழைக்க வேண்டும். மக்கள் ஆணையும், அதிகாரங்களும் தம்மிடம் குவிந்திருக்கும் போது, பக்கபலமாக இருக்கும்போது, தடங்கலுக்கும், தாமதத்துக்கும் இடம் கொடுத்து தமது தலைமைத்துவத்துக்கு அபகீர்த்தி உண்டாக்கலாமா?

ஆழம் அறிந்தே காலை விட வேண்டும். அதன் பின்னர் முன்வைத்த காலை பின்னே வைக்கக்கூடாது.

# சமாதானப் பேச்சுக்களின் முடிவுகள் முஸ்லிம்களுக்கு திருப்திதர வேண்டும்!

## அமைச்சர் அஷ்ரப் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 27

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நடைபெறும் சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடைய வேண்டும் என நாங்கள் பிரார்த்திக்கிறோம். ஆனால் அரசு யாருடன் எதைப் பேசினாலும் அந்தப் பேச்சு வார்த்தையின் முடிவு வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கு திருப்தி தரும் முடிவாக இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், புனர்வாழ்வு, புனரமைப்பு, துறைமுக கப்பல் போக்குவரத்து அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் முன்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த திங்களன்று சம்மாந்துறை அல் மர்ஜான் மகளிர் கல்லூரியில் நடந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் அஷ்ரப் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது;

''வடக்கு–கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்குத் திருப்தியளிக்காத எந்தவொரு முடிவையும் ஏற்றுக் கொள்வதற்கு நாம் ஆயத்தமில்லை என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தி வருகின்றோம். இலங்கை முஸ்லிம்களுடைய அரசியல் வரலாற்றில் நாம் பலவித பிரச்சினைகளுக் கூடாகச் சென்றிருக்கிறோம். பலவிதமான சோதனைகளையும், வேதனைகளையும் சந்தித்திருக்கிறோம். எமது போராட்டத்தைத் தொடர்ந்தும் எடுத்துச் செல்வதற்கு, சமுதாயம் வெற்றிப் பாதையில் நிற்பதற்கு, நமது உணர்வுகள் உடைக்கப்படாமல் நாம் வெற்றியடைவதற்குப் போராட்ட உணர்வுகள், விடுதலை உணர்வுகள் மிக முக்கியமானவையாகும்.

அந்த விடுதலை உணர்வுகளை அல் மர்ஜான் மகளிர் கல்லூரி வளர்த்து வருவதைக் காணும்போது பெருமிதமடைகிறேன்.

நாம் என்றாவது ஒருநாள் எமது தளைமையினங்களை — தடைகளை — தகர்ப்போம் என்ற உணர்வுகள் இக்கல்லூரியில் கல்வியினூடாகக் கொடுக்கப்பட்டு வருவதைக் காணும் போதும் பெருமைப் படுகின்றேன்.

ஒரு காலம் இருந்தது ஆயுதக் குழுக்கள் வந்து விட்டார்கள் என்றால் எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடிவிடும் காலம் அது. சொத்து, சுகம், சுதந்திரம் எம்மிடையே இருந்த போது அவற்றை இழக்க முடியாதவர்களாக நின்றோம்; அச்சமுள்ள ஒரு சமுதாயமாக நின்றோம். ஆனால் எல்லாவற்றையும் இழந்த, இழப்பதற்கு எதுவுமில்லாத நிலையில் நாம் அச்சமற்றவர்களாகவுள்ளோம்.

கடந்த 40 வருடங்களுக்கு மேல் நமது முஸ்லிம் சமுதாயம் புறக்கணிக்கப்பட்டு செல்லாக்காசாக தேவைகளைப் பெற்றெடுக்க முடியாத நிலையில் அடிமைகளாக, அஞ்சி, ஒடுங்கி இருந்தது.

இன்று அந்த நிலையை மாற்றி சக்தியுள்ள ஒரு சமுதாயமாக, அரசியலில் பேரம் பேசக்கூடிய ஒரு சமுதாயமாக, உரிமைகளுக்கும் சலுகைகளுக்கும் இடையில் வேறுபாட்டைக் காணக்கூடிய ஒரு சமுதாயமாக எம்மை இறைவன் மாற்றியுள்ளான்.

இருந்தும்கூட எல்லாம் நல்லதாக இல்லை, நாளை இந்த மண்ணிலே என்ன நடக்கும் என்று தெரியாதவர்களாக நாமிருக்கின்றோம். வட — கிழக்கில் இரத்தம் தோய்ந்த பிரதேசங்களாக எமது முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்கள் இருக்கின்றன.

ஆயிரக்கணக்கான முஸ்லிம் வாலிபர்களையும் வனிதையர்களையும், அப்பாவிகளையும் இழந்து நிற்கின்றோம். இந்த வரலாற்றுப் பின்னணியில் நாம் எதிர்காலத்தை ஊன்றி நோக்கி கொண்டிருக்கின்றோம்.

யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் முஸ்லிம் காங்கிரஸ் இலங்கை முஸ்லிம்களுடன், அவர்களது எழுச்சியுடன் சேர்ந்த ஒரு பெரியக்கமாக மட்டுமன்றி இந்த நாட்டு மக்களுடைய முழு அரசியலிலிருந்தும் பிரிக்க முடியாத ஒரு சக்தியாக மாறியிருக்கின்றது— என்றார். [ஐ]

## புலிகளின் குரல் வானொலியில்

**27 — 01 — 1995**
**வெள்ளி இரவு**

★ 8-01 — கலைமஞ்சரி — நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம் — ''உலக உலா'' ஜனவரி மாத சஞ்சிகை, பொன். கணேசமூர்த்தியின் 'தூரம் தொடுவானம்' நாவல், சிறுகதை — செல்வி எஸ். தர்சினி எழுதிய ''போராளிக்கு அன்புடன் போராளி'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை — கவிஞர் அ. செ. முருகானந்தம் எழுதிய ''வான் நோக்கும் அகதி''
★ 8-25 — கணப்பொழுது சி. கண்ணம்மா எழுதிய ''கப்டன் பாஸ்கரன்''
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் — வே. பாலகுமாரன் எழுதிய ''நினைவுகள் அழிவதில்லை''
★ 8-50 — வாத்திய கானங்கள்
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**28 — 01 — 1995**
**சனி காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி

**ஒலிபரப்பு**
**வெள்ளி மாலை**

★ 5-01 சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக்கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — கணநேரக் காவியங்கள்
★ 5-30 — மண்ணின் குரல்
★ 5-40 — நேயர் கடிதம்
★ 5-45 — தமிழீழ கானங்கள்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — நாடகம் — சங்கீததாசன் எழுதிய 'நிலையற்ற தூண்கள்'
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — என் தெரிவு
★ 6-30 — மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

# நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கல்வி அமைச்சருக்கு உத்தரவு

கொழும்பு, ஜன. 27

கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரனவை இம்மாதம் 27 ஆம் திகதி (இன்று) காலி நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு காலி மேலதிக நீதிவான் குவான் பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தம்மை அச்சுறுத்தியதுடன், தாக்கியதாகவும் குற்றஞ்சாட்டி சமன் குமார செனிவிரத்தின என்பவரால் காலி மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு கடந்த செவ்வாயன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது மேலதிக நீதிவான் அமைச்சர் ரிச்சார்ட் பத்திரனவை 27ஆம் திகதி வெள்ளி (இன்று) ஆஜர் செய்யுமாறு கட்டளையிட்டார். [ஐ]

# பாடசாலைகளின் தேவைகள் குறித்து திட்டம் தயாரிக்குமாறு பணிப்பு!

வலிகாமம் தெற்கு, ஜன. 27

1995ஆம் ஆண்டுக்கான பாடசாலை கட்டட, தளபாட பற்றாக்குறைகளைப் பூர்த்தி செய்வது சம்பந்தமான திட்டமிடல் வேலைகளை மேற்கொள்ளுமாறு கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யூ. டபிள்யூ. நாணயக்கார அறிவித்துள்ளார்.

இது விடயத்தில் கோட்ட மட்டத்தில் சகல பாடசாலைகளிலும் நிலவும் குறைபாடுகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும்—

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் மற்றும் பொது மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனைகளின் பேரில் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் எனவும்— அவர் அறிவுறுத்தியுள்ளார்.

கோட்ட மட்டத்தில் தயாரிக்கப்படும் திட்டம் பின்னர் பிராந்திய கல்விப் பணிப்பாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு மாவட்ட மட்டத் திட்டம் தயாரிக்கப்படும்.

பின்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கீகாரத்தோடு பிரதம கல்விச் செயலாளர் மூலம் மாகாண திட்டமிடல் பிரிவால் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித்துறைக்கான திட்டம் தயாரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு, மாவட்ட மட்டத்தில் கொடுப்பனவு வேலைகளும் நடைபெறும்.

மாவட்ட கல்விப் பணிப்பாளர்களே இது சம்பந்தப்பட்ட சகல பொறுப்புக்களையும் ஏற்பார்கள் எனவும் திரு. நாணயக்கார தெரிவித்துள்ளார். (ஐ-152)

# பொலிஸ் துணையின்றி துப்பாக்கியை மீட்டது நாய்!

## கடுகண்ணாவையில் சம்பவம்

கொழும்பு, ஜன. 27

பொலிஸாரின் துணை இன்றி பொலிஸ் நாய் ஒன்று ரீ. 56 ரகத் துப்பாக்கி ஒன்றையும், 30 ரவைகளையும் மோப்பம் இட்டுக் கண்டு பிடித்துள்ளது.

கடுகண்ணாவ பொலிஸ் பிரிவில் அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கடுகண்ணாவைப் பொலிஸ் பிரிவில் அமைக்கப்பட்டு வரும் வீடு ஒன்றினுள் இருந்தே இவற்றை அந்த நாய் கண்டு பிடித்தது.

கண்டு பிடிக்கப்பட்ட துப்பாக்கியும், ரவைகளும் திருமலை மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றிலிருந்து கடந்த ஆண்டு ஆகஸ்டில் காணாமற் போயிருந்தன என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து கடுகண்ணாவைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# மட்டக்களப்பு மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஜன. 27

மட்டக்களப்பில் கடந்த சில நாட்களாக மாணவர்கள் பாடசாலைகளை பகிஷ்கரித்து வருகின்றனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆரையம்பதி மகாவித்தியாலய ஆசிரியர் ஒருவரை அப்பாடசாலை வளவினுள் வைத்து மற்றொரு பாடசாலை ஆசிரியர் தாக்கியதை அடுத்து, தாக்கிய ஆசிரியரை மண்முனைப்பற்று பிரதேசத்திற்கு வெளியே இடமாற்றம் செய்ய வேண்டும் என்று கோரியும் —

நாற்பது மாணவருக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையில் இயங்கும் சம்மாந்துறைக் கோட்டத்திலுள்ள விரச்சோலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு மேலுமொரு ஆசிரியரை நியமிக்குமாறு கோரியுமே மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# பாடசாலைகள் பற்றிய புள்ளி விவரம் சேகரிப்பு

## யாழ். பிரதேச செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ். பிரதேச செயலகம் யாழ். கோட்டப் பாடசாலைகளில் புள்ளி விவரங்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

பாடசாலைகளின் விவரம், அதன் தரங்கள், மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை போன்ற தகவல்களையே யாழ் பிரதேச செயலகம் திரட்டி வருகிறது.

இப்புள்ளி விவரங்களை திரட்டுவதற்கு உத்தியோகத்தர் ஒருவரை பிரதேச செயலகம் நியமித்துள்ளது (ஐ-17)

# வடபகுதிக்கு தேவையான உரவகைகளின் மதிப்பீடு

## புனர்வாழ்வு அமைச்சு கோருகிறது

கொழும்பு, ஜன. 27

அடுத்து வரும் இரண்டு காலபோகப் பயிர்ச்செய்கைக்கும் தேவையான உரவகைகளின் மதிப்பீட்டு விவரங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு வடபகுதி அரச அதிபர்களை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமும் புனர்நிர்மாண அமைச்சின் செயலாளருமான திரு எம். என். ஜுனைட் பணித்துள்ளார்.

வடபகுதியில் வீ. ! . ரீ. டி. எம் அமோனியம் சல்பேற் போன்ற இரசாயன உரவகைகளுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நீக்குவதற்குரிய முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு இவ் விவரங்களைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிக்கு யூரியா உரம் எடுத்துச்செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளமையால் விவசாயிகள் ரீ. டீ. எம் அமோனியம் சல்பேற் போன்ற உரவகைகளை நம்பியே பயிர்ச்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## விஞ்ஞான தின நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜன. 27

கொக்குவில் இந்துக் கல்லூரியின் விஞ்ஞான தினவிழா கடந்த ஞாயிறன்று செல்வன் கா. பிரதிப்ஆனந்தின் தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணனித்துறைத் தலைவர் திரு. எஸ். கனகநாதன் கலந்து கொண்டார்.

''சாரதி'' என்ற மலரும் அங்கு வெளியிடப்பட்டது. வினாடி வினாப்போட்டி கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெற்றன. (ஐ)

# ஒரு ஜனாதிபதி- இரு பிரதமர்கள் பிரச்சினை தீருவதற்கு உதவுமா?

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒற்றையாட்சிமுறையின் அடிப்படையில் சாத்தியமில்லை என்பதை அரசு தரப்பினர் தெளிவாக உணர்ந்துள்ளார்கள்.

ஒற்றையாட்சி முறைக்கு பதில் ஒருவகை கூட்டாட்சியே (Unified) பொருத்தமானது என்று ஜனாதிபதி தெரிவித்திருப்பதாக அரச தரப்பு செய்திகள் கூறுகின்றன.

ஆயினும் சமஷ்டி (Federal) என்ற பதத்தைப் பாவிப்பதில் ஏதாவது சிக்கல் ஏற்படலாம் என்றும், இதை சிங்கள இனவாத சக்திகள் அரசுக்கு எதிராகப் பயன்படுத்த தயங்க மாட்டா என்றும் அரசு தரப்பில் அச்சம் நிலவுவதாகத் தெரியவருகிறது.

**பண்டா — செல்வா ஒப்பந்தம்**

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை பண்டா—செல்வா ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வுத்திட்டம் தயாரிக்கப்படும் என்ற யோசனையை அவர்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள் என்பது கேள்விக்குறியே.

ஏனென்றால், பண்டா — செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்ட காலத்தின் பின்னர் கடந்த சுமார் 35 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், இவ்வொப்பந்தத்தை போதாதவையாக்கி விட்டன. ஏன் 1987 இல் எழுதப்பட்ட இலங்கை — இந்திய ஒப்பந்தத்தைக் கூட இன்று போதுமான ஒரு தீர்வாக கொள்ள முடியாத சூழலே நிலவுகிறது.

தவிரவும் பண்டா—செல்வா ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருக்காத வடக்கு — கிழக்கு இணைப்பு இன்று ஒரு முக்கிய நிபந்தனையாக மாறியும் விட்டிருக்கிறது.

ஆயினும், பண்டா—செல்வா ஒப்பந்தத்தை [illegible]யாகக்கொண்ட தீர்வுத் திட்டம் என்பதை [illegible] துக் கொண்டு இப்போதைக்கு எதுவும் சொல்லமுடியாது என்றும் —

பாரிய அதிகாரப் பங்கீடுகளை தாம் செய்ய தயாராக இருப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார் என்பதால் நடக்கப் போவது என்ன என்பது குறித்து எந்த முடிவுக்கும் வர முடியும் என்றும் — வடக்கிலுள்ள புத்திஜீவிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை, புலிகள் தரப்பில் இருவேறு சுதந்திர அரசுகளின் ஒன்றியம் என்ற ஓர் அமைப்பு பற்றிய எதிர்பார்ப்பும் நிலவுவதாக சில செய்திகள் கூறுகின்றன.

**2 குடியரசுகள்**

இந்த உத்தேச குடியரசுகளின் ஒன்றிய அமைப்பின் கீழ் (Confedaration) ஸ்ரீலங்கா, [illegible] கள் அமையும் எனவும் இவை [illegible] மன்றங்களைக் கொண்டிருக்கும் என்றும் இவற்றிற்கு தனித்தனியாக இருவேறு பிரதமர்கள் இருப்பர் என்றும் ஒன்றியத்தின் தலைவராக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இருப்பார் எனவும் கூறப்படுகிறது.

இத்தகைய ஒரு தீர்வுத் திட்டம் சரிவருமானால், ஸ்ரீலங்கா பௌத்த குடியரசாக இருக்கும் அதேவேளை தமிழீழ குடியரசு ஓர் இன, மதச்சார்பற்ற குடியரசாகவும் இருக்கும் என்றும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இத்தகைய உத்தேச ஒன்றியத்தில் முஸ்லிம், மலையக மக்களது நிலைமை தொடர்பாக இதுவரை எத்தகைய தீர்மானமும் எடுக்கப்படவில்லையென்றும், இன்னமும் இவ்வுத்தேசத் திட்டம் பருமட்ட அளவிலான நிலையிலேயே உள்ளது எனவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், சமஷ்டி முறையானது மிகவும் விரிந்த அர்த்தம் உள்ளது என்பதால் இது தொடர்பான தெளிவான விவரங்கள் வெளியிடப்படமுன் அவற்றின் வெற்றி தோல்வி குறித்து எதுவும் சொல்வதற்கில்லை.

தற்போது நடைமுறைக்கு வந்திருப்பது தாக்குதல் தவிர்ப்பு உடன்பாடு மட்டுமே.

அரசியல் தீர்வு குறித்த தீர்மானம் ஒன்று எடுக்கப்படுவதற்கு அடிப்படையான ஒரு சூழ்நிலையை இது ஏற்படுத்துமே தவிர இதுவே தீர்வாக அமைந்துவிடாது.

இந்த சுமுகநிலை வழங்கியுள்ள வாய்ப்பான நிலைமையின் கீழ் இன ஐக்கியத்தைப் பேணக்கூடிய அரசியல் தீர்வு முயற்சிகள் அக்கறையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அந்த முயற்சிகள் பின்வருவனவற்றைக் கணக்கில் எடுத்து செய்யப்படுமானால் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

★ தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.

★ இலங்கை அரசை ஒரு மதச்சார்பற்ற அரசாக அறிவித்தல்.

★ வடக்கு-கிழக்கில் நடைபெற்ற— நடைபெறும் திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்பாக ஒரு தெளிவான முடிவு எடுக்கப்படல்; இத்தீர்மானம் இனங்களை பிரதேச ரீதியில் சிறுபான்மையினராக்கும் நிலைமையை இல்லாதொழிப்பதாக அமைய வேண்டும். (உதாரணமாக, அரசின் குடியேற்றக் கொள்கைகள் தேசிய இனங்கள் ஒவ்வொன்றினதும் பாரம்பரிய நிலங்களில் அக்குறிப்பிட்ட தேசிய இனத்திற்கே முன்னுரிமை வழங்கப்படுவதாக அமையவேண்டும்).

★ அரசின் எல்லா உயர் மட்ட ஸ்தாபனங்களிலும் எடுக்கப்படும் தீர்மானங்களில் தேசிய இனங்களின் நலன்கள் பாதிக்கப்படாத வண்ணம் இருக்க, அவ்வினங்களது அதிகாரமையங்களது அங்கீகாரத்தைப் பெறுவது நியதியாக்கப்படல் வேண்டும்.

(நன்றி: சரிநிகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜம்மு காஷ்மீரில் பயங்கரம்:

# குடியரசு தின நிகழ்ச்சியில் பெரும் குண்டு வெடிப்பு!

### மாநில ஆளுநர் அருந்தப்பு

புதுடில்லி, ஜன. 27

இந்தியாவின் 46 ஆவது குடியரசு தினத்தை ஒட்டி ஜம்மு காஷ்மீரில் மௌலான ஆஸாத் ஸ்ரேடியத்தில் நேற்று காலை நடந்த விழாவில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் எழுவர் மரணம் அடைந்தனர். சுமார் 50 பேர் காயம் அடைந்தனர். மாநில ஆளுநர் ஜெனரல் கே. வி. கிருஷ்ணராவ் மயிரிழையில் உயிர் தப்பினார்.

விழாவினை ஆளுநர் கிருஷ்ணராவ் கொடியேற்றி ஆரம்பித்து வைத்தபின் மக்கள் மத்தியில் உரையாற்றிக் கொண்டிருந்த சமயம் இக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

ஆளுநர் நின்றுகொண்டிருந்த இடத்தில் இருந்து சுமார் 6 மீற்றர் தொலைவில் குண்டு வெடித்த போதும் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

இதேவேளை—

எல்லைக்கு அப்பால் இருந்து ஏவப்பட்ட மூன்று றொக்கட்டுக்கள் ஜம்மு காஷ்மீர் பகுதிக்குள் நேற்றுக் காலை விழுந்து வெடித்ததில் மூவர் படுகாயமடைந்தனர்.

பாகிஸ்தான் படையினரே இத்தாக்குதலை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

### பாலைதீவு மண்ணித்தலை பகுதிகளில்

# பாழடைந்த நிலையில் தேவாலயங்கள் காட்சி!

பாலைதீவு புனித அந்தோனியார் கோயில், மண்ணித்தலை சென். செபஸ்தியார் கோயில் என்பன வழிபாடுகள் இன்றி பாழடைந்த நிலையில் இருப்பதாக அங்கு சென்று மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னரே அப்பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறி சென்றதை அடுத்தே மேற்படி ஆலயங்கள் பராமரிப்பு, வழிபாடுகள் இன்றி பாழடைந்த நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ—17)

### தமிழ் குழுக்களின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலர் தம்மீது தாக்குதல் நடக்கும் என்ற அச்சம் காரணமாக தாங்கள் முன்னர் வரவில்லை என்று கூறினார்கள்.

இன்றுள்ள போர் இடைநிறுத்த சூழ்நிலையைப் பயன்படுத்தி எம்மிடம் சரண் அடையுமாறு கேட்கிறோம்.

ஏனைய குழுக்களைச் சேர்ந்த பலர் எம்மிடம் சரண் அடையப் போவதாக மக்கள் மூலம் எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

அச்சமயங்களில் நாம் அவதானமாகவே முடிவுகளை எடுத்திருந்தோம்.

**ஆயுதங்களுடன் சரணடையலாம்**

இன்றுள்ள நிலையில் எம்மிடம் சரண் அடைய விரும்புபவர்கள் எந்த மாவட்டத்திலும் உள்ள எமது அமைப்பின் பொறுப்பாளர்களிடமும் ஆயுதங்களுடன் சரண் அடையலாம். அவர்களுக்கு ஆபத்து எதுவும் இல்லை.

ஏனைய குழுக்கள் காலத்துக்கு காலம் தமது கொள்கைகளை மாற்றுகின்றனர். இதனையும் அவர்களின் சுயநலப் போக்கையும் உணர்ந்து மக்கள் விடிவுக்காக போராட விரும்புபவர்கள் எம்முடன் இணைய விரும்புகிறார்கள்.

எம்மிடம் சரண் அடைபவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிறோம்; அதற்காக பலதிட்டங்களை நாம் நடைமுறைப்படுத்துகிறோம்.

அத்துடன் அவர்கள் தமது குடும்பத்தவர்களுடன் இணைய வாய்ப்பு அளிக்கின்றோம்.

**பலர் சரண்**

எம்மிடம் இதுவரை பலர் சரண் அடைந்துள்ளார்கள். தம்மை பகிரங்கப்படுத்த வேண்டாம் என்று அவர்கள் எம்மிடம் தெரிவித்துள்ளார்கள்.

தற்போதுள்ள சூழ்நிலையில் எம்மிடம் சரண் அடைந்தவர்கள் குறித்து பகிரங்கப்படுத்துவது சிக்கலாக இருக்காது என்ற காரணத்தால் இன்று இவர்களைப் பகிரங்கப்படுத்துகிறோம்.

முன்பு நாம சரண் அடையலாம் என்று விடுத்த அறிவிப்புக்கள், சரண் அடைய விரும்புபவர்களுக்கு சரியான முறையில் போய்ச் சேராத காரணத்தால் இன்று பகிரங்கமாக இந்த வேண்டுகோளை விடுக்கிறோம் என்றார். (ஒ—3)

### எடுபிடி வேலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாகக் கூறினார்கள். என்னை ஊர்காவலர் என்று காட்டி எனது பெயரில் 5 ஆயிரம் ரூபா சம்பளம் அவர்கள் பெற்றுக்கொள்வதாக அறிந்தேன். எனக்கு ஒரு சதமும் தருவதில்லை. எனது பெற்றோர் என்னைப் பார்க்க வந்தால் திரும்பிச் செல்ல பஸ் செலவுக்குக் கூட பணம் தருவதில்லை.

அவர்கள் எனக்குத் தந்த வேலையும், சித்திரவதையும் என்னை புலிகளிடம் சரண் அடைய — சேர — வைத்துள்ளது. அவர்களின் அடிமை வாழ்வில் இருந்து விடுதலை பெற்றுவிட்டேன் என்று சந்தோஷப்படுகிறேன்.

என்னைப்போல் அடிமை வாழ்க்கை வாழும் பலர் புலிகளுடன் சேர விரும்புகிறார்கள். தப்பிஓடப் போகிறீர்களா என்று கேட்டு எம்மை அவர்கள் தாக்குவார்கள்.

எங்களில் இரண்டு மூன்று பேர் ஒன்றுசேர்ந்து கதைக்க அவர்கள் விடமாட்டார்கள்.

அங்கிருக்கும் பலர் தப்ப விரும்புகிறார்கள். ஆனால் அதற்காகத் தமது பெற்றோர் பழிவாங்கப் படலாம் என அவர்கள் அஞ்சுகிறார்கள்.

**சுட்டுப் புதைத்தனர்**

அண்மையில் எம்முடன் இருந்து தப்பிஓட முயன்ற ராஜி, சபேசன் என்ற இரு உறுப்பினர்களைச் சுட்டுப் புதைத்து விட்டார்கள்.

அடிமை வாழ்க்கையில் இருந்து தப்பவந்த எங்களுக்கு தொழில் தந்து உதவுமாறு புலிகளைக் கேட்கிறோம். எம்மைப் புலிகள் நன்கு உபசரித்து பராமரிக்கிறார்கள்.

என்னுடன் அங்கிருந்த தோழர்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன். "பயமில்லாமல் இங்கு வாருங்கள்; புலிகள் உங்களை நன்றாகப் பராமரிப்பார்கள்; அவர்கள் உங்களை வரவேற்பார்கள்; நீங்கள் இங்கு வாருங்கள்" என்று அவர்களுக்கு அழைப்பு விடுக்க விரும்புகிறேன்.

வவுனியாவில் எங்களுக்கு இராணுவம் தான் ஆயுதங்களை தந்தது. புதிய அரசாங்கம் வந்தபின் ஆயுதங்கள் பறிக்கப்பட்டன. பங்கர்களில் நிற்பவர்களுக்கு மட்டும்தான் ஆயுதம் வழங்கப்பட்டுள்ளது.

"புளொட்" குழுவினர் தம்மிடம் இருந்த பல ஆயுதங்களை கிடங்கு வெட்டி மூடி வைத்துள்ளார்கள்.

புளொட் அமைப்பில் ஒரு குழுவினர் இராணுவத்துடன் ஊர்காவலர்களாக உள்ளனர். அவர்களுக்கு விசேட சீருடை வழங்கப்பட்டுள்ளது.

இதைவிட மற்றொரு குழு ஒன்று இருக்கிறது. அது ஆட்களைக் கடத்தி வந்து பணம் பறிக்கிறது. பணம் கொடுக்க மறுத்தால் தாக்குவார்கள்.

வவுனியாவில் நான்கு முகாம்களில் எம்முடன் சுமார் 500 பேர் இருந்தனர்.

யுத்தநிறுத்தம் வந்த பின்னர் நாங்கள் பயமின்றி வந்தோம்.

இராணுவ அதிகாரிகள் எம்மிடம், 500 மீற்றருக்குள் புலிகள் வந்தால் ஒன்றும் செய்யக்கூடாது என்று கூறினார்கள். ஆனால் புளொட் குழுவினர் தலைக் கறுப்புத் தெரிந்தால் சுடுங்கள் என்று கூறினர்.

யுத்த நிறுத்தத்தை குழப்ப "புளொட்" முனைகிறது.

வவுனியாவில் எவரின் உதவியுமின்றி ஈ. பி. ஆர். எல். எவ். அலுவலகம் திறந்து இருக்கின்றது. ரெலோ இராணுவத்தினருடன் திரிவார்கள். ஈ. பி. டி. பி. அங்கு இல்லை.

புளொட் மட்டும் தான் ஆட்களைச் சேர்க்கிறது— என்றார். (உ-3)

### வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜன. 27

தொழில் நுட்பப் பாடங்களுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை வினாத்தாள்களும், யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் 1994 ஆம் கல்வி ஆண்டிற்கான இறுதிப்பரீட்சை வினாத் தாள்களும் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன. (ஒ-4-173)

### இளவரசி ஆன் கொழும்பு விஜயம்

கொழும்பு, ஜன. 27

பிரித்தானிய இளவரசி ஆன் எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு கொழும்பு வரவுள்ளார்.

பிரித்தானிய தூதரக அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமது விஜயத்தின்போது அரச அதிகாரிகளை அவர் சந்திப்பார். அத்துடன் ஐக்கிய இராஜ்ஜிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் கொழும்பு கிளையையும் பார்வையிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

### கல்வி மேம்பாட்டுப் பேரவை:

## சிறப்புப் பரிசு பெறும் மாணவர்கள் விவரம்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் கடந்த ஆண்டு நடத்தப்பெற்ற தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு மற்றும் தமிழீழ இளநிலைத் தேர்வில் தேசிய மட்டத்தில் சிறப்புச் தேர்ச்சி பெற்று, நாளை நடக்கவுள்ள பரிசளிப்பு விழாவில் பரிசு பெறவுள்ள மாணவர் விவரம் இங்கே தரப்படுகிறது.

மாணவர் பெயருக்கு அருகில் அடைப்புக் குறிக்குள் பாடசாலையின் பெயரும் பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு**

**கணிதம்**

சிவசோதினி செந்தூரன் (யாழ் இந்து — 99) — முதலாம் பரிசு.

சிவந்தி குமரேசன் (வேம்படி மகளிர் — 98) — இரண்டாம் பரிசு.

நவரத்தினம் ரமணன் (யாழ். இந்து — 98)—இரண்டாம் பரிசு.

செல்வரட்ணம் உதயசங்கர் (யாழ். இந்து — 97) நான்காம் பரிசு.

**விஞ்ஞானம்**

சிவராஜா சுதர்சன் (ஹாட்லிக் — 94) — முதலாம் பரிசு.

செல்வரட்ணம் உதயசங்கர் (யாழ் இந்து — 93 — இரண்டாம் பரிசு.

செல்லத்துரை மயூரன் (பரியோவான் — 92) — மூன்றாம் பரிசு.

சுதர்சனா மகேந்திரன் (யாழ்ப்பாணக்கல்லூரி — 91) — நான்காம் பரிசு.

**ஆங்கிலம்**

சங்கீதா பாலசுப்பிரமணியம் (சுண்டிக்குளி மகளிர் — 98) — முதலாம் பரிசு.

சுகிர்தா நவரட்ணசிங்கம் (வேம்படி மகளிர் — 96) — இரண்டாம் பரிசு.

ராஜகுமாரசுவாமி நிசாந்தன் (புனித பத்திரிசியார் — 94) — மூன்றாம் பரிசு.

**சமூகக்கல்வியும் வரலாறும்**

சோமசேகரம் வாகீசன் (யாழ். மத்திய கல்லூரி— 89) — முதலாம் பரிசு.

றொபின்சன் பேனாட் பிரசாந்தன் (புனித பத்திரிசியார் — 87) — இரண்டாம் பரிசு.

இந்திரலிங்கம் தெய்வேந்திரன் (ஹாட்லிக் — 86) — மூன்றாம் பரிசு.

நடராஜா ஜெயகரன் (யாழ் இந்து — 86) — மூன்றாம் பரிசு.

**தமிழ்மொழி**

சுதர்சனா மகேந்திரன் (யாழ்ப்பாணக் கல்லூரி — 91) — முதலாம் பரிசு.

உமா இராசேந்திரம் (வேம்படி மகளிர் — 90) — இரண்டாம் பரிசு.

சுகுணாளினி கந்தையா (வேம்படி மகளிர் — 90) — இரண்டாம் பரிசு.

சஞ்சிதா தில்லைநாதன் (வேம்படி மகளிர் — 90) — இரண்டாம் பரிசு.

காயத்திரி அசோகன் (வேம்படி மகளிர் — 90) — இரண்டாம் பரிசு.

நடேசு சுபேந்தன் (மானிப்பாய் இந்து 90) — இரண்டாம் பரிசு.

**தமிழீழ இளநிலைத் தேர்வு**

**தமிழ்**

புவனேந்திரன் சுழநாதன் (உடுப்பிட்டி அ. மி. க. — 98) — முதலாம் பரிசு.

சயந்தி குகதாசன் (வேம்படி மகளிர் — 97) — இரண்டாம் பரிசு.

ஜனனி தில்லைநாதன் (வேம்படி மகளிர் — 97) — இரண்டாம் பரிசு.

**ஆங்கிலம்**

விநாயகமூர்த்தி துஷ்யந்தன் (யாழ். இந்து — 100) — முதலாம் பரிசு.

அருமைநாயகம் டினேஸ் பெனேசர் (பரியோவான் — 99) இரண்டாம் பரிசு.

மகேஸ்வரன் நிற்றகுலன் (பரியோவான் — 99) — இரண்டாம் பரிசு.

இரத்தினம் ரஜீவன் (பரியோவான் — 99) — இரண்டாம் பரிசு.

மகேந்திரநாதன் சுபேந்திரன் (பரியோவான் — 99) — இரண்டாம் பரிசு.

கைலநாதன் வாகீஷியன் (பரியோவான் — 99) — இரண்டாம் பரிசு.

**கணிதம்**

அரியநாயகம் துஷ்யந்தன் (உடுப்பிட்டி அ. மி. — 100 — முதலாம் பரிசு

சிவகுமாரன் கிருஷ்ணகுமார் (யாழ். இந்து — 99) — இரண்டாம் பரிசு.

சிவகலா சிவசுப்பிரமணியம் (மெதடிஸ்த பெண்கள் — 99) — இரண்டாம் பரிசு.

**விஞ்ஞானம்**

விநாயகமூர்த்தி துஸ்யந்தன் (யாழ் இந்து — 97) — முதலாம் பரிசு.

சூசைநாயகம் டெனிசேவியர் (சம்பத்திரிசியார் — 97— முதலாம் பரிசு.

அனுஷா சிவபாதசிங்கம் (யாழ் இந்து மகளிர் கல்லூரி — 93, மூன்றாம் பரிசு.

**சமூகக்கல்வி**

ஜெயரூபா தனபாலசிங்கம் (வேம்படி மகளிர் — 100) — முதலாம் பரிசு.

யேசுதாசன் ஜான்சன் (பத்திரிசியார் — 97) இரண்டாம் பரிசு.

சிவகுமாரன் கிருஷ்ணகுமார் (யாழ் இந்து — 96) — மூன்றாம் பரிசு.

குமாரிபுஷ்பா இலங்கைநாதன் (வேம்படி மகளிர்) — 96 — மூன்றாம் பரிசு

கணபதிப்பிள்ளை குமணன் (ஹாட்லிக் — 96) — மூன்றாம் பரிசு.

தர்மராசா சிறிநிவாசன் (ஹாட்லி — 96) — மூன்றாம் பரிசு.

சிவபாதசுந்தரம் ஜெயநாதன் (உடுப்பிட்டி அ. மி. க. — 96) — மூன்றாம் பரிசு.

சிவதி சிவலிங்கராசா (சுண்டுக்குளி மகளிர் — 96) — மூன்றாம் பரிசு. (அ)

### முழு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகையத் தீர்வு ஒன்றுக்கு இணங்குவதற்கு இரு தரப்பினரும் நீண்ட காலம் — விரிவாகப் பேச்சு நடத்த வேண்டியிருக்கும்.

— இவ்வாறு வொய்ஸ் ஒவ் அமெரிக்கா தெரிவித்தது. (உ-க)

### பெலவத்தை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் தங்களின் அவலங்கள் பற்றி மகஜர் சமர்ப்பித்தும் எவ்வித பதிலும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். (ஒ-க-6)

## வார இறுதியில் நடக்கும் கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 27

தற்போது ஆரம்பமாகியுள்ள கிரிக்கெட் பருவ காலத்தில் இவ்வார இறுதியில் நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ கொக்குவில் இந்து எதிர் கனகரத்தினம் ம. ம. வி —கொக்குவில் இந்து மைதானத்தில்— இன்று பிற்பகல் 2.30 மணி முதல், நாளை காலை 8.30 மணி முதல்

★ யாழ். மத்திய கல்லூரி எதிர் உதயன் வி. க. அணி —மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை காலை 8.30 மணிமுதல்.

★ சென். ஜோன்ஸ் எதிர் யாழ். பல்கலைக்கழக அணி— சென்ஜோன்ஸ் மைதானத்தில் — நாளை காலை 8.30 மணி முதல்.

★ ராஜம் - விக்ரம்" சுற்றுக் கிண்ணப் போட்டியில் ஜொலிஸ்ரார்ஸ் வி. க. அணி எதிர் சென்றலைட்ஸ் வி. க. — யாழ் இந்து மைதானத்தில் — நாளை காலை 8.30 மணி முதல். (உ)

## அரிசித் தட்டுப்பாடு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படாதவகையில் அரிசியின் விலை விற்பனை ஆகியன சீரமைக்கப்பட்டன.

அறுவடை காலத்தில் ஆகக் குறைந்த விலைக்கு — புசல் 400 ரூபாவரை — நெல்லை விற்கவேண்டியிருந்த விவசாயிகளுக்கு நெல்லின் விலை அறுநூறு ரூபா என திட்டவட்டமாக உறுதி செய்யப்பட்டது.

அறுவடை காலம் என்றாலும், விளைச்சல் இல்லாத பருவம் என்றாலும் விவசாயிகள் 600 ரூபாவுக்கு ஒரு புசல் நெல்லை விற்பனை செய்யும் அதேவேளையில் —

எல்லாக்காலத்திலும் கிலோ 30 ரூபாவுக்கும் குறைவாக பாவனையாளர்கள் அரிசியைப் பெற்றுக் கொள்ளவும் வழி செய்யப்பட்டது.

**தமிழீழ உற்பத்தி**

அத்தியாவசிய தேவை ஏற்பட்டாலன்றி — நிவாரணக் கொடுப்பனவுகளுக்குத் தவிர — ஏனைய தேவைகளுக்கு தமிழீழப் பகுதியில் உற்பத்தியாகும் அரிசியையே பாவனைக்கு விடுவது என்று முடிவு செய்யப்பட்டதுடன்—

அதற்கேற்ற வகையில் உற்பத்தியை ஊக்குவிக்கவும், விநியோகத்தை சீரமைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

வன்னிப் பெருநிலப் பரப்பில் அறுவடையாகும் நெல்லை உரியமுறையில் சேமித்து — குடாநாட்டுக்கும் விநியோகித்து — — விளைச்சல் இல்லாத பருவத்திலும் மக்களுக்கு நிர்ணய விலையில் அரிசியை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதனால் மாரி காலத்தில் — 1993 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் 60 ரூபா வரை விற்பனையாகிய அரிசி, கடந்த மழை காலத்தில் — 1994 நவம்பர், டிசம்பரில் — குடாநாட்டில் தட்டுப்பாடின்றி நிர்ணய விலைக்கு — கிலோ 30 ரூபாவுக்குக் குறைவாக — மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது

இதற்காக முன்கூட்டியே— நவம்பர், டிசம்பர் மாதத்துக்குத் தேவையான — அரிசி குடாநாட்டில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அது அந்த மாதங்களில் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

**மழையினால் ஒழுங்கு பாதிப்பு**

ஆனால் அரிசித் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய மழைக் காலம் கடந்த பின்னர், திடீரென ஜனவரி பிற்பகுதியில் எதிர்பாராமல் பெய்த மழையினால் அரிசி விநியோக ஒழுங்கு பாதிப்புற்றது.

வன்னிப் பகுதியில் கடுமையாகவும், குடாநாட்டில் சுமாராகவும் பெய்த இந்த மழையினால்—

★ குடாநாட்டில் உள்ள எழுபதுக்கும் அதிக நெல் ஆலைகள் ஒரு வாரத்துக்கு மேல் இயங்கவில்லை

★ வன்னியில் இரணமடுக் குளம் போன்றவை நிறைந்து, தண்ணீர் திறந்து விடப்பட்டதாலும், குடமுருட்டியாறு போன்றவை எல்லை மீறிப் பாய்ந்ததாலும், வன்னியில் சேமிப்புக் களஞ்சியங்களிலிருந்து நெல்லை லொறிகளிலிருந்து அவசர தேவைக்கு ஏற்றிவரமுடியாத நிலை ஏற்பட்டது. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட வீதிகள், செப்பனிடப்பட்ட பின்னரே — சுமார் ஒருவாரகாலதாமதத்தின் பின்னரே — சில தினங்களுக்கு முன் நெல் எடுத்து வரும்பணி ஆரம்பமானது.

★ மழை காரணமாக கிளாலி ஊடாக நெல்லை குடாநாட்டுக்கு எடுத்துவரும் பணி பாதித்தது.

இந்தக் காரணங்களினாலும்—

சந்தையில் மா தட்டுப்பாடு மற்றும் நிவாரணக் கொடுப்பனவாக அரிசியை வழங்குலதில் ஏற்பட்ட தாமதம் ஆகியவற்றினாலும், அரிசியின் பாவனை குடாநாட்டில் அதிகரிக்க ஒரு தட்டுப்பாடுநிலை ஏற்பட்டது.

**இப்போது நெல் வருகிறது**

ஆனால் கடந்த இரண்டொரு தினங்களாக வன்னியிலிருந்து கிரமமாக — தினசரி 20 லோடுகளுக்குக் குறையாமல் — நெல் குடாநாட்டுக்கு வரத்தொடங்கியுள்ளதுடன், சகல அரிசி ஆலைகளும் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியுள்ளன. இந்த ஆலைகளிலிருந்து இரண்டொரு தினங்களில் அரிசி சந்தைக்கு வரத் தொடங்கிவிடும்.

இது தவிர —

அவசரமாகத் தேவைப்பட்டால் விநியோகிக்கவென கணிசமான அளவு அரிசியை கொழும்பிலிருந்து தருவிக்கவும் சம்பந்தப்பட்டோர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

எனவே அரிசித்தட்டுப்பாடு இரண்டொரு நாளில் நீங்கிவிடும்.

ஆகையினால் மக்கள் முண்டியடித்து அரிசியை வாங்கி வீட்டில் குவிக்க வேண்டிய அவசரம் ஏதும் இல்லை.

— இவ்வாறு சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது. (உ—3)

### பயமுறுத்தி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமயபுரம் பகுதிகளில் இப்படியான சித்திரவதை முகாம்களை அவர்கள் அமைத்துள்ளார்கள். அப்பாவி மக்களை பிடித்து வந்து பணம் கேட்பார்கள்; பணம் கொடுக்க மறுத்தால் அடித்து சித்திரவதை செய்வார்கள்.

எம்மை கூலி வேலைகளிலும், எடுபிடி வேலைகளிலும் ஈடுபடுத்துவார்கள்; அடித்து துன்புறுத்துவார்கள்.

எம்முடன் அங்கிருந்தவர்களில் சுமார் 50 பேர் அங்கிருந்து தப்பி விடுதலைப் புலிகளிடம் சரண் அடையவிரும்புகிறார்கள். எப்படி வரலாம் என்று தெரியாத நிலையில் உள்ளனர்.

சித்திரவதையில் இருந்து தப்ப காலம் பார்த்திருந்தோம். யுத்த இடைநிறுத்தம் வந்ததும் ஒருவாறு சென்றியில் இருந்து கம்பிவேலியால் தாண்டி புலிகளிடம் வந்துவிட்டோம் — என்றார். (உ—3)

### புளொட் முறைப்பாடு

கொழும்பு, ஜன. 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களுக்கு வெளியே ஆயுதங்களுடன் நடமாடுவதன் மூலம் போர் இடைநிறுத்தத்தை விடுதலைப் புலிகள் மீறிவருவதாக "புளொட்" அமைப்பு பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையிடம் முறைப்பாடு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. [உ]

### மீண்டும் வேலை

கொழும்பு, ஜன. 27

கடந்த 1980 ஆம் ஆண்டு வேலை நிறுத்தத்தில் வேலை இழந்தவர்களில் 3 ஆயிரம் பேருக்கு அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் மீண்டும் வேலை வழங்கப்பட இருக்கிறது.

1980 ஆம் ஆண்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வேலை இழந்த ஆயிரக்கணக்கான அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவது என அரசு எடுத்த முடிவின்படி 3 ஆயிரம் அரச ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

### பெற்றோல் விலை உயர்வு

கொழும்பு, ஜன. 27

பெற்றோல் ஒரு லீற்றரின் விலை நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி முதல் 5 ரூபாவால் அதிகரிக்கப் பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 40 ரூபாவாகவும், சுப்பர் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 42 ரூபா 50 சதமாகவும் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. (ஒ-க-4)

### அமைச்சர்கள் அமெரிக்கா விஜயம்

கொழும்பு, ஜன. 27

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. வி. குணரத்னாவும் அமெரிக்காவுக்கு இவ்வாரம் விஜயம் செய்கின்றனர்.

"நான் எந்த விவகாரம் சம்பந்தமாகவும் பேச்சு நடத்துவதற்கு அங்கு போகவில்லை" என்று அமைச்சர் கதிர்காமர் சொன்னார்.

### பொன்விழா

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பொன் விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு அதிபர் திருமதி லோ. குமாரசாமி தலைமையில் நடைபெறும்.

பேராசிரியர் வி. கே கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து பொன் விழா மலர் வெளியிட்டு வைக்கப்படும். இரவில் நடனம், வில்லுப்பாட்டு, நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். (க-173)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் குமாரசாமி (குட்டி)

சச்சாய் தெற்கு, அம்மன் கோயிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் குமாரசாமி (கச்சாய் கண்ணகை அம்மன் கோயில் பரிபாலன சபைச் செயலாளர்) நேற்று 26-01-95 காலமானார்.

அன்னார் நந்தினி ஸ்ரோஸ், கொடிகாமம் உரிமையாளர் சுப்பிரமணியம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், தில்லைநாயகியின் அன்புக் கணவரும், திலீபன், தினேஷ், திபாகரன், தியஷனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வேலாயுதபிள்ளை (பிரதேச சபை, கொடிகாமம்)- பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், கணபதிப்பிள்ளை (தொழில் நுட்ப அதிகாரி, வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்), கந்தசாமி (வர்த்தகர், கொடிகாமம்), நடராசா (ஜேர்மனி), காசிநாதன் (வர்த்தகர், கொடிகாமம்), தவராசா (ஜேர்மனி), அமிர்தலிங்கம் (வர்த்தகர், கொடிகாமம்), திருமதி வே. காசிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், வேலுப்பிள்ளை, பாலன் (இத்தாலி), செல்வரட்டினம் (சிவா), ரஞ்சன் (ஜேர்மனி), குணம் (சுவிஸ்), திருமதி சிவசோதி கணபதிப்பிள்ளை (அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி), ஆனந்தவட்சமி, ஜமுனாவதி, யோகமலர், பாரசக்தி, அருந்ததி, வசந்தநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (27-01-95) வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. கணபதிப்பிள்ளை
(சகோதரன்)

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்

(R. D. D. JAFFNA)
(34878)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 - 01 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org